திருவள்ளுவராண்டு 2054 16.08.2023

# உலகத்தமிழ்

இதழ் ககூஙூ (193)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (14.08.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் பேராசிரியர் முனைவர் மா. நன்னன் அவர்களின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவரின் துணைவியார் திருமதி ந.பார்வதி அம்மாள் அவர்களிடம் நூலுரிமை பரிவுத் தொகையான 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா. செல்வராஜ், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ஔவை அருள், பேராசிரியர் முனைவர் மா. நன்னன் அவர்களின் மகள்கள் திருமதி வேண்மாள், திருமதி அவ்வை மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.




இன்று (14.08.2023) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனத்தால் அளிக்கப்பட்ட ஆங்கிலப் பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சியை நிறைவு செய்த' மொழிபெயர்ப்புத் துறை அலுவலர்கள் மற்றும் (18) பணியாளர்களுக்கு பயிற்சி நிறைவுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், இ.ஆ.ப.,தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ந.அருள், பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவன இயக்குநர் திருமதி ஜனகா புஷ்பநாதன், பிரிட்டிஷ் கலை நிறுவன முதுநிலை ஆசிரியை திருமதி கிருபா இரகுராம், தகவல் தொழில்நுட்ப முதுநிலை மேலாளர் திரு. ரேட்லி இம்மானுவேல் மற்றும் ஒருங்கிணைப்பாளர் திருமதி லதா பெர்னான்டோ ஆகியோர் கலந்துகொண்டனர்.




இன்று (14.08.2023) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி திட்ட இயக்ககத்தால் தொகுக்கப்பட்ட ஆட்சிச்சொல் அகராதி மூன்று தொகுதிகளை வெளியிட்டு சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவன இயக்குநர் திருமதி ஜனகா புஷ்பநாதன், பிரிட்டிஷ் கலை நிறுவன முதுநிலை ஆசிரியை திருமதி கிருபா இரகுராம், தகவல் தொழில்நுட்ப முதுநிலை மேலாளர் திரு. ரேட்லி இம்மானுவேல் மற்றும் ஒருங்கிணைப்பாளர் திருமதி லதா பெர்னான்டோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

"உறுபுலி ஊனிரை யின்றி ஒருநாள் சிறுதேரை பற்றியும் தின்னும்"
என்னும் உவமையால், தாளாண்மையின் பெருமை உணர்த்தும்
நாலடியார் பாடல் எண் நூற்றுத் தொண்ணூற்று மூன்று;
திறமிகு படைப்புகளைச் செய்நேர்த்தியுடன் தாங்கி வரும்
உலகத் தமிழிதழ் எண் நூற்றுத் தொண்ணூற்று மூன்று.

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| 4 | கொள்கை விளக்கக் குறிப்பு |
| 5 | நூலேணி |
| 6 | தமிழெழுச்சி |
| 7 | ஆகஸ்டும் அணுகுண்டின் அழிவும்! |
| 9 | அவ்வப்போது |
| 10 | தேன்துளி |
| 11 | சேரமன்னர் வரலாறு |
| 12 | ஆங்கிலம் அரும்பிய அரசும்—வாழ்வும்! |
| 13 | தனித்தமிழ் மாட்சி |
| 14 | பொன்வண்டு |
| 15 | நற்றிணை—ஆங்கிலம் |
| 16 | நினைவில் நிற்கும் நிகழ்ச்சி! |
| 17 | பதிகங்களைப் படியுங்கள்! |

உள்ளடக்கம்


19 எறும்பியல்!

20 வள்ளுவம்!

21 தமிழன்னை நான்மணிமாலை

22 மனையில் கிடைக்கும் மருந்து

23 Bharathan In Kamba Ramayanam

24 பூ மழை

29 எல்லாம் தமிழ்!

30 புகழ் வணக்கம்!



# கொள்கை விளக்கக் குறிப்பு

## தமிழ் வளர்ச்சி

## 2023 – 2024

10



## இயல்–1

## தமிழ் வளர்ச்சித் துறை

### 1.3.1. பாவேந்தர் பாரதிதாசன் விருது

தமிழியக்கம் கண்ட புரட்சிக் கவிஞர் பாவேந்தரின் கவி மரபினைப் போற்றும் வகையில், அவர்தம் மரபில் படைப்புகளை வழங்கும் சிறந்த கவிஞர் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டிற்கான பாவேந்தர் பாரதிதாசன் விருது திரு.வாலாசா வல்லவன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 86 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.2.தமிழ்த் தென்றல் திரு.வி.க.விருது

தமிழுக்கு பன்முகத்தான் தொண்டாற்றிவரும் சிறப்பு வாய்ந்த தமிழ் இலக்கியப் படைப்பாளர் ஒருவருக்குத் தமிழ்த்தென்றல் திரு.வி.க.விருது' வழங்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டிற்கான 'திரு.வி.க.விருது' நாமக்கல் திரு.பொ.வேல்சாமி அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 43 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.3.திருவள்ளுவர் விருது

மானுடமறையாகிய திருக்குறளில் அறிவுறுத்தப்பட்டுள்ள அறநெறிகளைப் போற்றியும் திருவள்ளுவத்தின் பெருமையை உலகோர் அனைவருக்கும் உணர்த்தும் வகையிலும் பல்வேறு பணிகளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு செயலாற்றி வரும் தமிழறிஞர் ஒருவருக்கு திருவள்ளுவர் திருநாள் அன்றுதிருவள்ளுவர்விருதுவழங்கப்பெற்றுவருகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாகரூ.2.00இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2023ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது இரணியன் நா.கு. பொன்னுசாமி அவர்களுக்கு வழங்கப்பட்டது இதுவரை 38 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## Chapter 1

## Tamil Development Department

### 1.3.1 Paventhar Bharathidasan Award

This award is given to an outstanding poet following the tradition to honour the legacy of the revolutionary poet “Paventhar” Bharathidasan. This award carries a cash prize of Rs.2.00 lakh, one sovereign gold medal, citation and shawl. Paventhar Bharathidasan Award for the year 2022 was given to Thiru. Valaja Vallavan. So far 86 scholars have received this amount.

### 1.3.2. Tamil Thendral Thiru. Vi.Ka Award

This award is presented to the eminent personality writer for the service rendered Tamil language. This award carries a cash prize of Rs.2.00 lakh, one sovereign gold medal, citation and shawl. Thiru.Vi.Ka. Award was given to Namakkal Thiru. Po. Velsamy for the year 2022. This award has been given to 43 scholars so far.

### 1.3.3. Thiruvalluvar Award

Thiruvalluvar Award is being given on Thiruvalluvar Day to one of the greatest personalities who is indulged in spreading the ethics of Thirukkural through various activities, in order to make the world aware of the pride of Thiruvalluvar. This award carries a cash prize of Rs.2.00 lakh, one sovereign gold medal, citation and shawl. Thiruvalluvar Award was given to Iranian Na. Ku. Ponnusamy for the year 2023. This award has been given to 38 scholars so far.

*வளரும் . . . .*



# நூலேணி

29


## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்



நூலின் பெயர் : எண்பத்திரண்டில் தமிழ்
நூலாசிரியர் : ச.வே. சுப்பிரமணியன், ந. கடிகாசலம், அன்னிதாமசு
பதிப்பாண்டு : 1985
விலை : ரூபாய் 90 /-
பக்கங்கள் : 1136
வெளியீட்டு எண்: 113




நூலின் பெயர் : தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம்
நூலாசிரியர் : ச. சிவசாமி
பதிப்பாண்டு : 1985
விலை : ரூபாய் 170 /-
பக்கங்கள் : 376
வெளியீட்டு எண் : 114




நூலின் பெயர் : Tolkappiyam – Phonology & Morphology ( An English Translation),
நூலாசிரியர் : D. Albert (R)
பதிப்பாண்டு : 1985
விலை : ரூபாய் 25/-
பக்கங்கள் : 316
வெளியீட்டு எண் : 115




நூலின் பெயர் : தமிழ் நாவல்கள் (அகர வரிசை),
நூலாசிரியர் : வே. சீதாலட்சுமி
பதிப்பாண்டு : 1985
விலை : ரூபாய் 40/-
பக்கங்கள் : 422
வெளியீட்டு எண்: 116

பண்டு நடந்ததனைப் பாடுகின்ற இப்பொழுதும்,

மண்டு துயரெனது மார்பை யெலாங் கவ்வுவதே!

ஓடித் தவறி உடையனவாம் சொற்களெலாம்,

கூடி மதியிற் குவிந்திடுமாம் செய்தியெலாம்,

நாசக் கதையை நடுவே நிறுத்திவிட்டுப் …





நாலடியில் இங்கு நடந்துவந்து நாம்மலையின்

மேலிருக்கும் போதே வெடுக்கென்று தூக்கிடுவான்

இங்கு வருமுன் இருவரும் கீழிறங்கி

அங்குள்ள சாரல் அடைந்திடுவோம் வாவென்றான்





# ஆகஸ்டும் அணுகுண்டின் அழிவும்!

1945ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6ஆம் தேதி காலை ஒளிமயமாக விடியும் வேளை எனோலாகே என்ற போர் விமானம் சப்பானின் ஹிரோஷிமா நகரின் நடுப்பகுதியில் தான் கொண்டு வந்த உலக அழிவுக் குண்டை உருட்டிவிட்டது. அந்தக் குண்டில் சுமார் 15 KT யுரேனியம் இருந்து வெடித்துச் சிதறி ஹிரோஷிமா நகரின் புகழ்மிக்க புரமோஷன் ஹாலினை விட சுமார் 600மீட்டர் உயரத்திற்கு எழும்பிய புகையுடன் அனைத்தையும் அனைவரையும் அழித்ததை அதிர்ச்சியுடனே அகிலமே கண்டு அலறியது.



எலும்புக்கூடாக அந்தக் கட்டிடத்தின் சில பகுதிகள் மட்டும் எஞ்சி நின்றன. எங்குச் சுற்றிலும் பிணக்காடு; எரிந்து மிஞ்சிய கட்டிடங்கள்; அப்பொழுதுதான் உலகம், போர்களின் ஆயுதங்களின் அபாய மாற்றத்தையும் இனி எங்காவது போர் வந்தால் எத்தகைய அழிவு நேரலாம் என்பதைப் புரிந்து கொண்டது. இந்தக் கொடிய நிகழ்வு, நடந்து சுமார் 78 ஆண்டுகள் சென்றுவிட்டன. பல்லாயிரக்கணக்கானவரைக் கொன்று, இன்றளவும் அதன் கதிர்வீச்சு விளைவினால் பாதிக்கப்பட்ட மக்களும் மழலையருமட் பாதி மனிதர்களாக வாழ்கின்றனர். அதன் கொடிய நச்சு சக்தி தெரிந்தும் அணுகுண்டுகளைக் கொண்டு அடுத்த நாடுகளைப் பயமுறுத்தும் வல்லரசு நாடுகளும் உற்பத்தி செய்ய முனையும் நாடுகளும் பாதுகாப்புக்காக எனத் தயாரிக்கத் துணியும் நாடுகளும் எனப் பல நாடுகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகின்றது. ஆனால், ஒரு நாட்டில் செய்யப்படும் அணுகுண்டு என்பது உலகம் முழுதும் அறிவிக்கப்படும் ஆபத்து என்பதை உணர வேண்டும்.

அணுகுண்டுகளின் சக்தி அதிகமாவது அகில அழிவிற்கு வித்தாகிவிடும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். நினா டானல் வால்டு என்ற அரசியல் விஞ்ஞானி கூறுவது சிந்திக்கத்தக்கது. அணுஆயுதக் கட்டுப்பாடு என்பது அணுஆயுதங்களை அனாவசியமாகப் பயன்படுத்தலாகாது என்ற பல நாடுகளின் கூட்டுக்குழு அறிக்கை என்பது நடைமுறையில் தீவிரமாக உணர்ந்து நடக்க வேண்டும் எனக் கூறுகிறார்.

ஆப்பன்ஹீமர் என்ற ஹாலிவுட் திரைப்படம் எடுக்கப்பட்டு, மிக வெற்றிகரமாக ஓடியுள்ளது. ஆனால், அதன் மூலம் தரப்படும் செய்தி உணர வேண்டிய நாள் இது; தருணம் இது. அமெரிக்காவின் இயற்பியல் அறிஞரான இவர் நியூமெக்சிகோவின் லாஸ்அலமாஸ் என்ற இடத்தில் 1943 முதல் 1945 வரை, இரண்டாம் உலகப் போரில் பங்குபெற்றார். அலாமோகார்டோ என்ற இடத்தில் தான் அணுவெடிப்பு சோதனை செய்த இவர், பெரும் பாராட்டையும் அமெரிக்காவைக் கண்டு எதிரிகள் அஞ்சுமாறு செய்தார். இவர் அணுகுண்டு வெடித்த நாளன்று தான் செல்லுட் கார்கருடன் என்றும், அதுதான் 'அழிக்கும் இறைவன் விஷ்ணு'வுடையது என்றும் கூறி விமர்சனத்துக்கு உள்ளானார். தீயவை அழிக்கப்பட வேண்டும் என்றும் சப்பானியரின் செருக்கு ஒடுக்கப்பட வேண்டும் என்றும் இரண்டாம் உலகப் போர் முடிவடைய வேண்டும் என்ற திட்டத்தில் செய்ததனால் ஏற்பட்ட அழிவு.

*தொடர்ச்சி அடுத்த பக்கம். . .*





# ஆகஸ்டும் அணுகுண்டின் அழிவும்!

***முன்பக்கத் தொடர்ச்சி . . .***

பெர்ச்வியல், ஆப்பன்ஹீமர் ஆர்தர்ரைடர் என்பவர் மூலம் சமஸ்கிருதமும் பகவத் கீதையும் கற்றது வரலாறு. பேராசிரியர் கொனிக் ஆப்பன்ஹீமரைப் பற்றிக் கூறும் பொழுது, "மிகவும் குழப்பமானவர் என்றும் சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தமற்று இருப்பவர்" எனக் கடிந்து கொண்டார். கோனிக் (Koenig) ஒருமுறை ஆப்பன் ஹீமரைப் போன்று சொல்லும் போது, "கோதே சொன்னது தான் எனக்கு நினைவுக்கு வருகிறது. எண்ணங்கள் தான் வாதங்களைத் தவிர்க்கும்; ஆனால், பரந்து விரியும். செயல் என்றென்றும் நிலைக்கும்; ஆனால், குறுகிய நெஞ்சங்களை வெளிப்படுத்தும்; அழிவுகளுக்கு உரமாகும்" என்பதற்கு உயிரூட்டமானவர் ஆப்பன் ஹீமர் (OPPENHEIMER, J. ROBERT., 1904 – 1967).

1946இல் அமெரிக்க அதிபர் ட்ரூமனிடம், "தகைமைத் தங்கப்பரிசு" பெற்றவர். பெர்க்லியில் இயற்பியல் பல்கலைக்கழகம் தொடங்கிய ஆற்றல் மிகுந்தவராக இருந்தாலும், அணுகுண்டு வெடித்து ஒரு அழிவிற்குக் காரணமாகிவிட்டது தான் வேதனையின் உச்சம். அந்த ஆகஸ்டு நிகழ்ச்சி, இன்றும் அழியாமல் ஒவ்வொருவர் மனதிலும் பகாசுரனாய்ப் பதிந்துள்ளது. இன்றைய ருசிய – உக்ரைன் போரிலும் அணுஆயுதத் தடை ஒப்பந்தம் அப்போதைக்கப்போது இருநாடுகளுக்கும் நினைவுபடுத்தப்படுகிறது. அமெரிக்க அதிபர் ரொனால்டு ரீகனும் சோவியத் அதிபர் மைக்கேல் கோர்பசேவும் சுமார் 38 ஆண்டுகளுக்கு முன், இந்த ஒப்பந்தத்தை மீண்டும் நினைவுபடுத்தும் வகையில், "இவ்வுலகில் இன்னொரு அணுஆயுதப் போர் வரக்கூடாது; வந்தாலும் இருவரும் வெற்றிகொள்ள இயலாது" எனக் கூட்டறிக்கை விட்டனர்.

திரு. புதின் அவர்களும் திரு. ஜோ பிடனும் சூன் மாதம் 2021இல் மீண்டும் சந்தித்து இந்த அறிக்கையை விவாதித்துள்ளனர். நேட்டோவும் (NATO), உக்ரேனை ஆதரித்தாலும் புதிதான அணுஆயுத உற்பத்திக்குத் தயார் செய்வதற்கு எதிர்ப்பாகவே உள்ளது.

தற்சமயம் உலகெங்கிலும் பல நாடுகளில், உள்நாட்டுக் கலகங்களும் எல்லைகளை மீறிய சச்சரவுகளும் நடந்து கொண்டு வருகின்றன. சுமார் 70,000 அணுஆயுதங்கள் அகிலமெங்கும் பரவியுள்ளன. சில கிடங்கில் உறங்கிக் கொண்டுள்ளன. சில மயிரிழையில் வெடிக்கும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. சீன அதிபர் ஃசி ஜின்பிங்க் கூட சென்ற நவம்பர் அன்று, "அணுஆயுதத் தடை ஒப்பந்தத்திற்குத் தங்கள் நாடும் ஒத்துழைக்கும்" எனக் கூறியுள்ளார். ருசிய – பெலாரஸ் நாட்டுப் பேச்சு வார்த்தையில் கூட, ருசிய, அமெரிக்க, இங்கிலாந்து நாட்டிற்கு, பெலாரஸ் நாடு தங்கள் நாட்டிலும் அணுஆயுதப் புது ஆயுதங்கள் உற்பத்தி இல்லை என உறுதியளித்துள்ளது. எனவே, மற்ற நாடுகளும் அணு ஆயுதத்தின் ஆபத்து அறிந்து அகில அழிவிற்கு விதிவகுத்து விடக்கூடாது. இன்னுமொரு ஹிரோசிமாவை இந்த உலகம் தாங்காது. இந்த விபத்துக்குக் காப்பீடு தரும் சக்தி எந்த உயிருக்கும் இருக்காது; பெறுவதற்கு உயிரொன்றும் இருக்காது என அறிந்து சமாதானத்துடன் வாழ்வோம்.





## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா ஆட்சிமொழிக் கருத்தரங்கம்

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தில் 12.07.2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு ஆட்சிமொழிக் கருத்தரங்கினை தொடங்கி வைத்து ஆற்றிய உரையின் மூன்றாம் பகுதி . . .

சட்டம், ஆணைகள், அரசாணைகள், அறிவிக்கைகள், அறிவிப்புகள் கடிதங்கள், குறிப்பாணைகள் அனைத்தும் தமிழிலேயே செயற்படுத்துவதில் தமிழ் வளர்ச்சித் துறை முனைந்து ஈடுபட்டுவருகிறது.

அரசு அலுவலர்கள், பணியாளர்கள் அனைவரும் தமிழிலேயே கையொப்பம் இடுதல் பெயர்களின் முன்னால் இடம்பெறும் தலைப்பெழுத்துகள் தமிழிலேயே எழுதப்படும் முறையையும் பின்பற்றச் செய்தல், ஆட்சிமொழித் திட்ட விதிமுறைகளின்படி பதிவேடுகள் அனைத்தும் தமிழிலேயே பேணப்படுவதையும், தமிழில்தான் அச்சிட்டு வழங்க வேண்டும் என்பதும் இன்றியமையாதப் பணிகளாகும்.

அரசின் துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட நிலை அலுவலங்கள் ஆகியவற்றின் பெயர்ப்பலகைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வைக்கப்படவேண்டும் எனவும் எழுத்துகளின் அளவு முறையே 5:3 என்ற வீதத்தில் அமைய வேண்டும் எனவும் இவ்வலுவலகங்களைத் தவிர பிற அலுவலகங்களில் (சார்நிலை) பெயர்ப் பலகைகள் தமிழில் மட்டுமே அமைவது போதுமானதெனவும் அரசு ஆணையிட்டுள்ளதை நாம் அனைவரும் அறிவோம். அதே போல, தொடர்ந்து வணிக நிறுவனங்களிடமும் இக்கருத்தினையே வலியுறுத்தி வருவதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். வணிக நிறுவனத்தின் பெயர்ப் பலகைகள் தமிழில்தான் முதலில் இடம்பெறுதல் வேண்டும். இரண்டாவதாக ஆங்கிலப் பெயரும். தேவைப்படின் பிற மொழிக்கும் என 5:3:2 என்ற எழுத்து வடிவில் இருக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.
அவ்வாணைக்கிணங்க தமிழ்நாடு வணிகர் சங்கத் தலைவரும். உறுப்பினர்களும் அரசுடன் இணைந்து தமிழில் பெயர்ப் பலகைகளைத் தட்டாமல் வைப்போம் என்று இசைவு தெரிவித்துள்ளதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மகிழ்ச்சியான நேரத்தில், தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக வழங்கப்பெறும் எண்ணற்ற விருதுகளுக்கு முத்தாய்ப்பாக தமிழ் வளர்ச்சித் துறைக்கு தனி அமைச்சகம் அவமத்து தானே அமைச்சரமகவும் பொறுப்பேற்று தமிழுக்குச் செம்மொழித தகுதிப்பேற்றினை ஒன்றிய அரசிடமிருந்து பெற்றுத்தந்த திடியவிடத்தின் புதையல்


*ஓடுகின்ற நதிகள் எல்லாம்*
*கூடுகின்ற கடலாக*
*பாடுகின்ற பாக்களை*
*சூடுகின்ற தமிழாக*
*வாடுகின்ற தமிழ் மக்கள்*
*நாடுகின்ற களஞ்சியமென*

திகழ்ந்திட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் ஓர் உயரிய விருதை உருவாக்குவதுதான் கொண்டிருக்கின்றோம். தமிழ் வளர்ச்சித் துறையின் இலக்காகச் சென்று சென்னையை அடுத்து, ஜூலை 17 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த மண்ணான திருவாரூரில் ஆட்சி மொழிக் கருத்தரங்கினை தமிழ் வளர்ச்சித் துறை நடத்தவுள்ளது என்பதையும் அறிந்து உவகை அடைகிறேன். வாழ்த்துகிறேன். வாய்ப்புக்கு நன்றி, நிகழ்ச்சியை சிறப்புற வாழ்த்தி, அதே நேரத்தில் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற இரண்டாண்டு காலத்தில் இந்த தமிழ் வளர்ச்சித் துறையின் மூலமாக பல்வேறு ஆக்கபூர்வமான பணிகளை இட்டிருக்கின்றார்கள். அந்த வகையில் தொடர்ந்து இந்த தமிழ் வளர்ச்சித் துறை அவருடைய இலக்கை, அவருடைய கனவை நிறைவேற்றுகின்ற வகையில் நிச்சயமாக செயல்படும். அதற்கு உங்களை போன்றவர்களுடைய ஒத்துழைப்பு தேவை என்பதை இந்த நேரத்தில் சொல்லி, நிகழ்ச்சிக்கு வாழ்த்து கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன். நன்றி. வணக்கம்.





**தேன்துளி — 1**


பிரான்சிஸ் புக்கானன்

1796ஆம் ஆண்டு முதல் கலெக்டர் பதவியில் நியமிக்கப்படுபவருக்கு உள்ளூர் மொழிகள் தெரிந்திருக்க வேண்டும் என்று கிழக்கிந்தியக் கம்பெனி அரசின் சென்னை கவர்னர் உத்தரவு பிறப்பித்தார். உள்ளூர் மொழிகள் தெரிந்திருந்தால், மக்களின் பிரச்னைகளை அதிகாரிகள் நேரடியாகப் புரிந்துகொள்ள முடியும்...

**தேன்துளி — 2**



எந்நாட்டவராலும் எக்காலத்தவராலும் உவந்து ஏற்றுக் கொள்ளுமாறு என்றும் நிலைத்த பண்புகளையோ, உண்மைகளையோ நெறிகளையோ சிந்தைக்கும் செவிக்கும் இனிய செஞ்சொற்களால் உரைப்பதே சிறந்த இலக்கியமென இலக்கண வரம்பு வகுப்போமானால் மணிவாசகர் அருளிய திருவாசகம் தலைசிறந்த தமிழ் மாமறையாகத் திகழ்வதாகும்.





உரைவேந்தர் ஔவை துரைசாமி



இவ்வகையால் அவனது புகழே நாடெங்கும் மிகுந்தது. அவன் மனப் பண்புக்கு ஏற்ற வகையில் அவன் மனைவியும் கற்பால் நாட்டவர் புகழும் நல்லிசை எய்தினாள். முல்லை மணம் கமழும் கூந்தலும், திருமுகத்தில் மலர் போல் அகன்று அழகுறத் திகழும் கண்களும், காந்தள் மலர்ந்ததொரு திப்பிய மூங்கில்வகை போலும் தோள்களும் உடைமையால், அவளது உருநலம் புலவர் பாடும் புகழ்மிக்கு விளங்கிற்று.

இத்தகைய நற்குண நற்செய்கைகளால் பாண்புற்ற மனைவியுடன் வாழ்ந்த குட்டுவனுக்கு ஆண்டு முதிரத் தொடங்கிற்று. அரசியற் புரோதிரான நெடும்பார தாயனார் உடன்வரக் குமரித் துறைக்குச் சென்று வல்லாரும் மாட்டாருமாகிய பல்வேறு இரவலர்க்கும் ஏனைப் பார்ப்பார்க்கும் அவன் பெரும் பொருளை வழங்கி "இரு கடல் நீரும் ஒரு பகலில்" ஆடினான்.

அதன் முடிவில், வேளிரும் குட்டுவரும் பூழியரும் கொங்கரும் ஆகிய நாட்டுத் தலைவர் உடன்வர, அவன் குட்ட நாட்டில் உள்ள அயிரைமலைக்குச் சென்று, அங்கே கோயில் கொண்டிருக்கும் கொற்றவைக்குப் பரவுக்கடன் செய்தான்.

பேரியாறு தோன்றும் ஏரிக்கு அண்மையில் நிற்கும் மலை முடிக்குப் பண்டை நாளில் அயிரை என்று பெயர் வழங்கிற்று. அதிலிருந்து தோன்றிவரும் அயிரையாறு இப்போது சவரிமலைப் பகுதியில் தோன்றிவரும் பம்பையாற்றோடு கூடிப் பெருந்தேனருவி என்று பெயர் பெற்று அயிரையூர் வழியாக ஓடுகிறது. அயிரையூர் இப்போது அயிரூர் என்று வழங்குகிறது. அயிரை மலையும் இப்போது அயிதைமலை யெனக் கூறப் படுகிறது. இந்த அயிதைமலையே சங்க நூல்கள் குறிக்கும் அயிரை மலையாம் என்று திரு. கே.ஜி. சேஷையவவர்களும் கருதுகின்றார்கள். அதை யாறு பம்பையோடு கலந்து பெருந்தேன் அருவி எனப்படுவதற்கு முன்பு, அதன் கரையில் அயிதையூர் என்றோர் ஊர் இருப்பதும், அது பெருந்தேனருவியாகி மேலைக்கடலை நோக்கி ஒடுங்கால் அதன் கரையில் அயிரூர் என்றோர் ஊரிருப்பதும், பிற்காலத்தே "அயிரூர் சொரூபம்" என்றொரு வேந்தர் குடிக்கிளை இருந்திருப்பதும் மேலே கண்ட முடிபை வற்புறுத்துகின்றன.

பின்பு குட்டுவன், அரசியற் சுற்றத்தாரும் தானைத் தலைவரும் புடைவரத் தன் மனையாளுடன் வஞ்சிமா நகர் வந்து சேர்ந்தான்; இரப்போர் சுற்றமும் புரப்போர் கூட்டமும் அவனைப் பாராட்டி வாழ்த்தின. நெடும்பார தாயனார் அரசன்பால் விடை பெற்றுக் கொண்டு துறவு பூண்டு காடு சென்று சேர்ந்தார். சில ஆண்டுகட்குப் பின்பு, ஒருகால், பாலைக்கோதமனார், "வேந்தே, எவ்வுயிர்க்கும் தீங்கு கருதாக் கொள்கை யாலும், சீர் சான்ற வாய்மையுரையாலும், சொல்லும் பொருளும் சோதிடமும் வேதமும் ஆகமுமாகிய இவற்றால் எய்திய புலமையாலும், முனிவர் துணையாதல் வேண்டி எடுத்த வேள்வித் தீயிடை எழுந்த ஆவுதிப் புகையும், விருந்தினரை உண்பிக்குமிடத்து எழும் நெய்யாகிய ஆவுதிப் புகையுமாகிய இரண்டின் நறுமனத்தாலும், வானுலகத் தேவர் விரும்பும் சிறப்பும் செல்வங்களும் நீ பெற்றுள்ளாய்; மேலும், நீ செருப்புமலைக்குரிய பூழியர்கட்குத் தலைவன்; மழவராகிய சான்றோர்க்கு மெய்ம்மறை; அயிரை மலையையுடையவன்; யாண்டு தோறும் பருவம் தப்பாது நன்மழை பெய்வதால் வளம் மிகப்படைத்து நோயில்லாத வாழ்வு திகழ, இயல்பாகவே முல்லை மணம் கமழும் கூந்தலும் மழைக்கண்களும் மூங்கில் போலும் தோள்களுமுடைய நின் மனைவியுடன் பல்லாயிர வெள்ளம் ஆண்டுகள் வாழ்வாயாக என்று வாழ்த்தினார்.

*வளரும் . . . .*



# ஆங்கிலம் அரும்பிய அரசும் – வாழ்வும்... !

வழக்கியல் வல்லுநர் செந்தமிழ்த்திலகம் திரு. செல்லத்தம்பி
சிறீக்கந்தராசா, இலண்டன் மாநகரம்

130

பஞ்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட வெவ்வேறு பொருள்களைக் குறிக்கவும் சொற்கள் தேவைப்பட்டன. Crinoline, Lingerie ஆகிய சொற்கள் புத்துருவாக்கம் பெற்ற சொற்கள் தாம். அதாவது பிரெஞ்சு, இலத்தீன், கிரேக்கம் ஆகியவற்றின் வேரிலிருந்து உருமாற்றப்பட்ட சொற்கள் தாம்.

Lingerie என்பது பழம் பிரெஞ்சுச் சொல்லான "Linge" என்பதிலிருந்து உருவாக்கப்பட்ட புதுச்சொல். Ragalan என்பது ஒருவித மேற்போர்வையின் ( Overcoat ) பெயர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த Lord Ragalan என்ற இராணுவத் தளபதியின் பெயர் அந்த மேற்போர்வைக்குச் சூட்டப்பட்டது. மக்கிரோஷ் ( Mack–intosh ) என்பது நீர்புகாத துணி ஒன்றின் பெயர்.

இத்தகைய துணியால் தைக்கப்பட்ட மழைதாங்கு போர்வையும் ( Rain Coat ) Mackintosh என்றே அழைக்கப்படுகின்றது. நீர்புகாத துணிவகையைக் கண்டுபிடித்த விஞ்ஞானியான Charles Mackintosh என்பவரின் பெயரே அத்தகைய துணிக்கும், துணியாலான போர்வைக்கும் பெயராயிற்று.

எந்திரத் தொழிற்றுறை பல வடிவங்களை எடுத்தது. நீராவியின் ஆற்றலைப் பயன்படுத்தி, எந்திரங்களையும் வாகனங்களையும் இயக்குகின்ற நீராவி எந்திரக் காலம் பிறந்ததும், வேறு பல சொற்கள் காளான் போல் முளைத்தன. Hydraulic, Piston, Centrifugal, Cylin–drical, Oscillating ஆகிய சொற்கள் அவ்வாறு பிறந்த சொற்களே.

தொழிற்றுறைச் சொற்களின் தோற்றம் விஞ்ஞானச் சொற்களின் பிறப்புக்கு வழிகோலிற்று.

வேதியியல் மொழி, உயிரியல் மொழி, மருத்துவ மொழி என்று பல மொழிகள் உருவாக நேர்ந்த போது, அந்த மொழிகளுக்கான சொற்களும் தேவைப்பட்டன. புதுச் சொற்களைப் படைக்கவேண்டிய அவசியமும் அவசரமும் ஏற்பட்டன. புதுச் சொற்களைப் படைப்பதற்குப் பழைய மொழிகளான கிரேக்கமும், இலத்தீனும் கைகொடுத்தன. கலைச்சொற்கள் என்ற துறைசார் சொற்களைப் படைப்பதற்கு மேற்படி செம்மொழிகள், முன்னொட்டுக்களாகவும் ( Prefixes ) பின்னொட்டுக் களாகவும் ( Suffixes ) பயனுற்றன. Biology, Telegram, Geology ஆகிய சொற்கள் இவ்வாறு பிறந்த சொற்கள்தாம்.

மருத்துவவியல் வளர்ந்து, மனித உடல் பற்றியும், உடற் கூறுகள் பற்றியும், உளவியல் பற்றியும், உடலியல் பற்றியும், நோய்கள் பற்றியும் மேலதிக அறிவு பெற்றபோது, உடற்கூறுகளைக் குறிக்கவும், பல்வேறுபட்ட நோய்களையும், நோய்க் குணங்களையும் குறிக்கவும் புதிய புதிய சொற்கள் தேவைப்பட்டன. தேவைகள் நிறைவேற்றப்பட்டன. சொற்கள் பிறந்தன. Diphtheria, Cholera, Tuberculosis ஆகிய சொற்கள் அவ்வாறு பிறந்த சொற்களுட் சில.

எந்திரத் தொழிற்றுறைப் புரட்சியை ஐரோப்பாவில் தொடக்கி வைத்த நாடு பிரித்தானியா என்பதால், பத்தொன்பதாம் நூற்றாண்டின்போது வெளியிடப்பட்ட விஞ்ஞான ஏடுகள், சஞ்சிகைகள், நூல்கள் என்பனவற்றுள் பாதிக்கு மேற்பட்டவை ஆங்கில மொழியில்தான் வெளியிடப்பட்டன. அதாவது தொழிற் றுறை மொழியும் விஞ்ஞான மொழியும் ஆங்கிலமே என்ற நிலமை உருவாகியது. புதிய சொற்கள் உலகெங்கும் பரவின. ஆங்கிலம் உலகெங்கும் செல்வாக்குப் பெற்றது.

*வளரும் . . . .*

## 6.கல்வியே அழியாச் செல்வம் . . .

இனிக், கல்வியுள்ளும் உலகநூற்கல்வி நிலையில்த பொருள்களையே உணர்த்துவதால், அதனால் விளையும் அறிவும் நிலையில்லாத இயல்பினதாய் நிலையான இன்பத்தைத் தரமாட்டாதாய் ஒழியும். அறிவுநூற் கல்வியோ, உலகநிலை, உயிரின்நிலை, உயிரோடு ஒன்றாய் நிற்கும் அறியாமையின் நிலை, இருவினைத் தோற்றம், உயிர் மூவகைக் குற்றமும் நீங்கும் வகை, முழுமுதற் கடவுளின் இயல்பு, அது செய்யும் உதவி, அதனோடொன்றாயிருந்து இம்மை மறுமை இரண்டிலும் நுகரும் இன்பநிலை முதலானவற்றை ஆராயும் உயர்ந்த ஆராய்ச்சியில் அறிவைத் தோயவைத்து, அவ் வழியால் அதனைத் தூயதாக்கிப், பேரொளியோடு

துலங்கவைத்தலின், அறிவுநூற் கல்விகற்றார்முன் உலகநூற் கல்விமட்டும் உடையார் விலங்கினம்போல் எண்ணப்படுவர்.

இவ்வுண்மை, "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோ டேனை யவர்"
என்ற தெய்வத் திருவள்ளுவர் திருக்குறளால் நன்கு அறியப்படும்; இத்திருக்குறளில் ' இலங்கு நூல் ' என்றது அறிவுநூலேயாம். வெளிப்பார்வையளவில் உயிர்கள் எல்லாம் ஒத்த செயலும் மாறுதலும் உடையனபோற் காணப்படினும், நுணுகி ஆராய்ந்தால் அவற்றின் அறிவும் முயற்சியும் ஏற்றத்தாழ்வாகவே யிருக்கும். உண்ணல் உறங்கல் மருவல் சாதல் எல்லாவற்றிற்கும் பொதுவாயிருப்பினும் விலங்கினங்களில் இழிந்த பன்றியும் மக்களில் அறிவுடையான் ஒருவனும் ஒப்பாவார் என எவரேனுங் கூறுவரோ ?

மக்களில் அறிவுடையான் ஒருவனும் அறிவிலான் ஒருவனும் அங்ஙனமே உண்ணல் உறங்கல் முதலான தொழிலளவில் வேறுபாடில்லாதவர்போற் காணப்படினும், அறிவுடையான் தனக்குள்ள அறிவின் சிறுமையால் தாழ்ந்தோவாதலும் எல்லார்க்கும் உடன்பாடேயாகும்.

அஃது உண்மையேயென்றாலும், உலக நூற்கல்வியியால் விளங்கும் அறிவுகொண்டு இம்மையில் எல்லா நலங்களும் பெறுவதாயிருக்க, இதற்கு மேலும் அறிவு நாற்கல்வி ஒன்று வேண்டுமென்பது எதன்பொருட்டோவெனின், உலக நூற்கல்வி ஒன்றேகொண்டு இம்மையிலும் மிகச் சிறந்த நலங்களைப் பெறுதல் இயலாது; இப்பிறப்பிற் பெறுதற்கரிய இன்பங்களையும் அறிவுநூற்கல்வியுடையார் எளிதிற் பெறுவர். கண்ணாற்கண்டுஞ் செவியாற் கேட்டும் வாயாற் சுவைத்தும் மூக்கால் முகத்தும் மெய்யால் தொட்டும் ஐம்பொறிகளால் துங்க்கும் இன்பங்களிலும்கூட அறிவுநூற்கல்வியால் உயர்ந்த அறிவு வாய்த்தவனுக்கு வரும் இன்பம், ஏனை உலகநூற் கல்விமட்டும் பெற்றவனுக்குத் தோன்றாது.

மிக்கி கூரிய முனையையுடைய ஓர் இருப்புக்கோல் ஆழ்ந்த்தோர் இடத்தையுந் துனைத்துச் செல்லும், முனை மழுங்கியதோ அதைப்போல ஆழ்ந்து செல்ல மாட்டாதாகும். உவகநூற்கல்வி சிறிது அறிவை விளக்குமேனும், அதனாற் செய்யப்படும் உலக முயற்சிகள் பலவும் மக்களுக்குப் பல்வகைக் கவலைகளையுந் துன்பங்களையும் விளைவித்து அவரது அறிவை அலுப்படையச் செய்து மழுக்கு மாதவின் அவர் ஐம்பொறி இன்பங்களையுங்கூடக் கூர்ந்து பார்த்துத் துய்க்க மாட்டார்.

*வளரும் . . . .*





எட்கர் அல்லன் போ

பெ நா அப்புஸ்வாமி மொழிபெயர்த்தது

12

பிறகு நீ நேரே வீட்டுக்கு வந்துவிடுவாயா ? அதன்பின் வைத்தியன் சொல்லைப்போல் என் சொல்லைத் தட்டாமல் கேட்பாயா ? சத்தியமாகச் சொல். உன் குலகௌரவத்தின் மீது ஆணை என்றேன்.




ஆகா ? அப்படியே சத்தியம் செய்துதருகிறேன். சரி இனி நாம் பொழுது போக்கலாகாது. உடனே புறப்படுவோம், வா என்றேன்.

என் மனம் மிகவும் வேதனைப்பட்டது. நானும் என் நண்பனோடு சென்றேன். லெகிராந்து, ஜுபிடர், நாய், நான் ஆகிய நால்வருமாகப் புறப்படும்போது மாலையில் சுமார் நாலுமணி இருக்கும். 'நான்தான் அவைகள் எல்லாவற்றையும் தூக்கிக்கொண்டு வருவேன்' என்று ஒரே பிடிவாதமாகச் சொல்லி, ஜுபிடர் அரிவாளையும் மண்வெட்டிகளையும் தானே தூக்கிக்கொண்டு வந்தேன். தன் எஜமானை நம்பின அந்தக் கருவிகளை அவனிடம் கொடுக்கலாகாது என்னும் பயமே இதற்குக் காரணம். சுறுசுறுப்பாக வேலை செய்யவேண்டும் என்னும் ஆசையாலோ, இயற்கையாக உள்ள நற்குணத்தாலோ அவன் இவ்வாறு செய்யவில்லை. தன் எஜமானனை நம்பாததே அவன் இப்படிச் செய்ததற்குக் காரணம். அன்று அவன் நடத்தையும் மிகவும் கடுகடுப்பாகவே இருந்தது. நாங்கள் போகும் வழி நெடுக, 'அந்த பாழாய்ப் போன வண்டு' என்பதைத் தவிர வேறொரு வார்த்தையும் அவன் வாயிலிருந்து வரவில்லை. நானும் வெறும் கையனாக நடக்கவில்லை, இரண்டு கைலாந்தர்களை எடுத்துக்கொண்டு வந்தேன். லெகிராந்து மட்டும் பளுவான சுமை ஒன்றையும் தூக்கிவரவில்லை. அவன் எடுத்து வந்ததெல்லாம் அந்தப் பொன்வண்டு ஒன்றைத்தான். அதை ஒரு நூற்கயிற்றில் கட்டி, செப்பிடு வித்தைக்காரனைப்போல், இப்படியும் அப்படியும் சுற்றிச் சுழற்றிக்கொண்டே நடந்தான். அவன் இப்படிச் செய்யக் கண்டதும் என் கண்ணிலிருந்து தாரைதாரையாக நீர் பெருகிவிட்டது. என் நண்பனுடைய சித்தம் கலங்கிவிட்டது என்பதற்கு அதுவே போதுமான அத்தாட்சி.

அந்த ஒருநாள் மட்டுமாவது அவனைப் போக்கும்படி விடுவதே நல்லது என்று என் புத்திக்குப் பட்டது. தக்க வழி ஏதாவது ஒன்றைத்தெரிந்து, அதை உறுதியோடு கையாளும் வரை அதனைத் தன் போக்கில் விடுவதே மேல் என்று எண்ணினேன். இதற்கிடையில் அவன் என்ன காரியமாகச் சொல்கிறான் என்று தெரிந்துகொள்ள எத்தனையோ வகையாய் அவனை ஆழம் பார்த்தேன். ஒன்றும் பலிக்கவில்லை. என்னைத் தன் கூட வர இணங்கச் செய்த பிறகு, எந்த விஷயத்தைப் பற்றியும் அவனுக்குப் பேச மனமில்லை என்பது தெரிந்தது. நான் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம், வர வரப் பார்த்துக் கொள்ளலாமா என்ற பதில் ஒன்று தான் கிடைத்தது.

தீவின் தலைப்புறத்தில் இருந்த குருகுடாவுக்கு வந்ததும், படகில் ஏறி ,அதைக் கடந்து சென்றோம். பிறகு, மறுகரையில் கரையோரமாயிருந்த மேட்டின் மேலேறி, வடமேற்காக நடந்தோம். போகும் வழியெங்கும் அடர்த்தியான காடு. அங்கு மனித சஞ்சாரமே இல்லை .

*வளரும் . . . . .*






பேராசிரியர் சி.அ.சங்கரநாராயணன்

சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதாளர், தமிழ்நாடு அரசு




## நற்றிணை—126

பொருள் வலித்த நெஞ்சினைத்
தலைவன் நெருங்கிச் செலவு அழுங்கியது

**பாலை**

பைங் காய் நல் இடம் ஒரீஇய செங்காய்க்
கருங் களி ஈந்தின் வெண் புறக் களரி
இடு நீறு ஆடிய கடு நடை ஒருத்தல்
ஆள் பெறல் நசைஇ நாள் சுரம் விலங்கி
துனைதரும் வம்பலர்க் காணாது அச் சினம்
பனைக் கான்று ஆறும் பாழ் நாட்டு அத்தம்
இறந்து செய் பொருளும் இன்பம் தரும் எனின்
இளமையின் சிறந்த வளமையும் இல்லை
இளமை கழிந்த பின்றை வளமை
காமம் தருதலும் இன்றே அதனால்
நில்லாப் பொருட் பிணிச் சேறி
வல்லே நெஞ்சம் வாய்க்க நின் வினையே

## Narrinai — 126

**HE SPEAKS-**

**(INTERIOR MONOLOGUE)**

**PALAI**

succulent raw fruit ripens red; falls maroon
warmed on dusty earth; en route tuskers charge;
ah! none they find, they dash palm tree trunks;
ritzy wrath in hit hit! Does trading yield
nice in such silken roads, say? Even if it does
after all does it exceed youth ? Are riches hot,
mickle love recur in age, can it enact so?
as youth dissipate can outcome thereof
level up bliss of union? why this mania!
yappy profit to boast! Isn't it, loss for you?
aren't you cordial, O Cordiac Inadequacy!

*To Continue...*



# நினைவில் நிற்கும் நிகழ்ச்சி!

முனைவர் தேவி நாச்சியப்பன்

161

இராயவரம் Lion.M.A.M.SP.காசி செட்டியார் அவர்கள் 11.07.2002இல் குழந்தைக் கவிஞர் அவர்களைப் பற்றி எழுதிய கட்டுரை.

## நினைவில் நிற்கும் நிகழ்ச்சி

---

இராயவரத்திற்குப் புகழ் சேர்த்தவர்கள் பலர் இருக்காங்க. அதிலே சிலர் நல்ல கல்வியாளர்கள். இன்னும் சில பேர் சிறந்த தொழில் அதிபர்கள். உதாரணத்துக்குச் சொல்லணும்னா கணிதமேதை சு. கதி. காந்தி பாடசாலையின் கதிரேசனார். பதிப்புத் துறையிலே வை. கோவிந்தன். சிறுவர் பத்திரிக்கையான 'பாப்பா மலர்' நிறுவிய பாப்பா தியாகராஜன் மற்றும் வெ.சுப. நடேசன் இப்படிப் பல பேரைச் சொல்லலாம்.

இருந்தாலும் 'குழந்தைக் கவிஞர்' என்று உலக அளவில் புகழ்பெற்றவர், பெருமை உடையவர் திரு. அழ. வள்ளியப்பா அவர்கள். அவர் பிறந்த ஊர் இராயவரம் என்று சொல்லும் போது, இராயவரத்திற்கே அது ரொம்ப ரொம்ப சிறப்பினை ஏற்படுத்துது. அதிலும் அவர் சு. கதி. காந்தி உயர்நிலைப்பள்ளி மாணவர் என்பதால் பள்ளியும் பெருமை பெற்றுச் சிறப்படைகிறது. இப்படிப்பட்ட பெரிய சிறப்பைப் பெற்றுத் தந்த குழந்தைக் கவிஞரை அவருடைய இந்த எண்பதாவது பிறந்த நாளில் நினைத்துப் பார்ப்பதும் அவரைப் பற்றிப் பேசுவதும் அவர் எழுதிய பாடல்களைப் படிப்பதும் மனசுக்கு ரொம்ப உற்சாகத்தைத் தருது.

எங்கள் ஊரில் யாரும் என்னைப் பெயர் சொல்லி அழைப்பதில்லை. குழந்தைக் கவிஞர் மட்டும் "காசி" என்று உரிமையோடு அழைப்பதில் எனக்குப் பெரிய மகிழ்ச்சி.

நம் குழந்தைக் கவிஞருக்கு மணிவிழா நடந்தது இப்போது என் நினைவுக்கு வருது. மணி விழாக்குழு செய்த பல பணிகளில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

"ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்." என்கிற

குழந்தைக் கவிஞரின் பாடல் வரிகளை உலோகத்தகட்டில் அச்சிட்டு 300 பள்ளிகளில் பதிக்கச் செய்தோம். பள்ளிச் சிறுவர்களுக்குப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் அளித்தோம்.

இராயவரம் மக்களும் கவிஞரின் மணிவிழாவினைக் கொண்டாடிப் பெருமைப்படுத்த வேண்டும் என்று நாங்கள் நினைத்தோம். குழந்தைக் கவிஞரின் பாராட்டு நிகழ்ச்சிகளில் எல்லாம் ஈடுபட்டிருந்த கவிஞர் செல்ல கணபதி அவர்கள் இராயவரம் வந்த போது இது பற்றிப் பேசினோம்.

குழந்தைக் கவிஞரின் நினைவையும் ராயவரம் அருள்மிகு முத்துமாரி அம்பிகையின் பெருமையையும் ஒரு சேர, இராயவரம் மக்கள் மனசுல இருக்கிற மாதிரி கீழ்க்கண்ட பாடல் வரிகளைக் கல்வெட்டாகப் பதிப்பது என்று முடிவு செய்தோம்.

"சக்திமிக்க தெய்வம் எங்கள்
முத்துமாரி அம்பிகை
சரணடைந்த பேருக்கெல்லாம்
அருள்சுரக்கும் அம்பிகை"

என்று தொடங்கும் குழந்தைக் கவிஞர் எழுதிய பாடலை இராயவரத்தில் உள்ள நகரத்தார் அனைவரின் முழு ஒப்புதலுடன் நிறுவினோம்.

கல்வெட்டுத் தயார் செய்து, அருள்மிகு முத்துமாரியம்மன் கோவிலில் பதித்து, தவத்திரு குன்றக்குடி அடிகளார் மூலம் அதைத் திறக்கச் சொன்னோம். அந்த விழாவில் நானும் கவிஞர் செல்ல கணபதி போன்ற நண்பர்களும் குழந்தைக் கவிஞரின் பெருமைகளைப் பற்றிப் பேசினோம்; பாராட்டி மகிழ்ந்தோம்.

முத்துமாரியம்மன் கோவிலில் இராயவரம் மக்கள், நகரத்தார் அனைவரும் கலந்து கொண்டு குழந்தைக் கவிஞரின் பாடல் உள்ள கல்வெட்டுப் பதித்து, அவருக்கு விழாக் கொண்டாடிப் பெருமைப்படுத்திய அந்த நிகழ்ச்சி உள்ளபடியே என்னால் மறக்க முடியாத நிகழ்ச்சியாக இப்போதும் நான் நினைத்துப் பார்க்கிறேன்.

பிறந்த ஊருக்குப் பெருமை சேர்த்தவர்.



## செவ்விசை மாமணி திருமதி சீதை மெய்கண்டான்

170

### பன்னிரண்டாம் திருமுறை

### சேக்கிழார் – திருத்தொண்டர் புராணம்

"உலகெலாம்" என இறைவன் அடியெடுத்துக் கொடுக்க, அதையே முதலாக வைத்து நம் சேக்கிழார் பெருமான், பெரியபுராணத்தைத் தொடங்கினார். பண்டைத் தமிழர் கடவுள் வாழ்த்தாக உருவத்திருமேனியை வாழ்த்துதலையே மரபாகக் கொண்டனர். பாரதம் பாடிய பெருந்தேவனார், நற்றிணையின் கடவுள் வாழ்த்தில் திகிரியோனை (திருமாலை) அவர் வாழ்த்தியுள்ளார். ஏனையவற்றில் உமையொருபாகனை (சிவனை) வாழ்த்தியுள்ளார். குறுந்தொகையின் நெடுவேற் சேவலங்கொடியோனை (முருகனை) வாழ்த்தியுள்ளார். அருவான கடவுளை உருவான தெய்வமாக அன்பே துணையாகக் கொண்டு காட்சிபெறுதற்குரிய மரபினை நக்கீரர்தான் தன் திருமுருகாற்றுப்படையில் திறம்பட எடுத்தியம்பியுள்ளார். புறநானூற்றில் நக்கீரர் பாடிய ஒரு பாடலில் பல்வேறு செயல்களுக்கும் சிவனையும் பலராமனையும் கண்ணனையும் முருகனையும் உவமையாக ஒரே பாட்டில் பாடியிருப்பது உணரத்தக்கது. (புற. 56) சேக்கிழார், நிலவுலாவிய நீர்மலி வேணியன் என்ற ஒரு வர்ணனையில் சிவனைக்காட்டி, அம்பலத்தில் ஆடும் இவன் "அலகில் சோதியன்" என்பது அறிவியல் கருத்தாக அமைந்திருக்கும். இன்றும் கோள்களின், விண்மீன்களின் தூரத்தை ஒளி ஆண்டுகளாக அளப்பதை நாம் காண்கின்றோம். பின்னால் வந்த இராமலிங்க அடிகளார் அருட்பெருஞ்சோதியாகத்தான் இறைவனை வழிபட்டார். கம்பர் கடவுள் வாழ்த்தில் ஆண்டவனை "அலகிலா விளையாட்டுடைய அண்ணலாக" ஆரம்பித்து வைப்பதை இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. கலித்தொகைக் கடவுள் வாழ்த்துப்பாடல் தமிழகத்தில் சிவ வழிபாட்டில் அச்சிவனுக்கு உரியனவாக புதிய செய்திகள் இரண்டைக் கூறியுள்ளார் என்கிறார் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம் அவர்கள். முதலில் அவன் சங்காரகாலத்தில் ஆடுபவன்; இரண்டாவது உயிர்கள் மாட்டுக் கொண்ட கருணையால் கட்புலனாம் வடிவுகொண்டு அருள்செய்ய வந்துள்ளான் எனக் கூறுகிறார். சிலப்பதிகாரத்தில் சிவபெருமானை பிறவா யாக்கைப் பெரியோன் என சமணசமயத்தில் இருந்த இளங்கோவடிகள் பாடியதிலிருந்து சிவ வழிபாட்டின் தொன்மையைப் புரிந்து கொள்ளலாம். சங்கநூல்களின் எட்டுத்தொகையில் ஒன்றாகிய கலித்தொகையில்கூட "ஆறு அறி அந்தணர்க்கு இருமறை பல பகர்ந்து, தேறுநீர் சடைக் கரந்து திரிபுரம் தீமடுத்துக், கூறாமல் குறித்தன்" எனக் கடவுள் வாழ்த்தாகத் தொடங்கப்படுவதில் சிவனின் வருணனையைக் காணலாம். எனவே, காலம் கடந்து வந்த இலக்கியங்கள் எல்லாம் கடவுள் வாழ்த்துடன் தொடங்கும் மரபினைக் காத்து, சேக்கிழார் கடவுள் வாழ்த்துடன் பெரியபுராணத்தைத் தொடங்கியுள்ளார்.

*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . . .*



செவ்விசை மாமணி திருமதி சீதை மெய்கண்டான்

சேக்கிழார் – திருத்தொண்டர் புராணம்

*முன்பக்கத் தொடர்ச்சி . . .*

தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்தத் தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி ஒல்லையவர் புராணக்கதை உலகறிய விரித்துரைத்த செல்வ மலிகுன்றத்தூர்ச் சேக்கிழார் எனக் கிருபானந்தவாரி சுவாமிகள் அவரை வணங்கித்துதிப்பார். தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே என ஔவையார் மொழிகின்றார். தூக்குசீர்த்திருத்தொண்டர் தொகைவிரிவாக்கினால் சொல்ல வல்லபிரான் எங்கள் சேக்கிழார் என அவரைப் புகழ்வது மரபு. வாணிதேவி வெண்தாமரைப் பூவையும் மறந்தனள் சங்கப் புலவர் பாவையும் மறந்தனள்; பதுமத்தோன் நாவையும் மறந்தனள் குறுமுனியாம் தமிழ்க்கோவையும் மறந்தனள்; தெய்வச் சேக்கிழார் நாவில் குடிகொண்டநல் என அனைவரும் தெய்வப்புலவரை வணங்குவர். சேக்கிழார் காலத்தில் ஈடுஇணையற்ற வெற்றியை இடைக்காலச் சோழர்கள் பெற்று நாடு வளமுடன் விளங்கியிருக்கிறது. எல்லையற்ற செல்வம் மனிதனை நிலைகுலையச் செய்து விடுமன்றோ! இடைக்காலச் சோழர் ஈடுஇணையற்ற வெற்றிகளால் மக்கள் வாழ்க்கையில் இன்ப வேட்டை இடம்பெற்று சமய வாழ்க்கை உள்ளீடற்றதாகப் போனதாகவும் அதனை உணர்ந்த சேக்கிழார் நாயன்மார்களின் வரலாறு மூலம் மக்களைத் தட்டி எழுப்பி, வாழ்வில் குறிக்கோள் வேண்டும் என இப்பெரியபுராணத்தை உருவாக்கியதாக அ.ச.ஞா. அவர்கள் தன் ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். உலகெலாம் என இறைவன் அடியெடுத்துக் கொடுத்ததனாலோ என்னவோ வாய்ப்பு வரும் போதெல்லாம் உலகம் உய்ய இத்தொண்டர்கள் பிறந்தனர் எனக் கூறிச் செல்கிறார். தன் திருத்தொண்டர் புராணத்தில்; “ஏழிசையம் பலகலையும் எவ்வுலகும் தனித்தனியே வாழ வரும் அவர் தம்மை” எனவும் கூறுவார். திருமுருகாற்றுப்படையில் சங்ககால நக்கீரரும் தன் நூலின் முதலடியாக, “உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு” எனத்தொடங்குவது கவனிக்கத்தக்கது. சேக்கிழார் அவ்வண்ணம் “உலகெலாம்” எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்து பல உட்கருத்துக்களை உள்ளடக்கிப் பாடப்பெற்றுள்ளது.

**உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்**
**நிலவு உலாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்**
**மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்**

என்ற பாடலில், இறைவன் உலக சக்தியனைத்தையும் ஒன்று திரட்டி, எண்ணத்தாலும் சிந்தையாலும் நோன்பினாலும் தவத்தினாலும் அறிந்துகொள்ள முயன்றாலும் இன்னவன் இப்படிப்பட்டவன் எனத் தெரியவியலா நிலைகொண்டவன்; வானத்தில் உலவும் நிலவும் நீர்மேகம் சுமந்த விசும்பினைத் தலைமுடியாய்க் கொண்டு ஒளிக்கதிராய் உலகம் வந்து அம்பலம் முழுதினை ஆட்கொண்டு இளகிய மென்மையான மலரடியும் சிலம்பொலியும் கொண்டவனை வணங்கிடுவோம் என வாழ்த்துகிறார்.

*வளரும் . . . . .*



பெரும் பேராசிரியர் செ.இரா.செல்வகுமார்
கனடா



எறும்பியல் என்றால் எவ்வளவு எளிதாக இருக்கின்றது பாருங்கள். ஆங்கிலத்தில் myrmecology (μύρμηξ myrmex "ant")இதுகூட தமிழில் முயிறு என்னும் எறும்பில் இருந்து வந்திருக்கலாம்!! முயிறு (முசிறு) என்பது செவ்வெறும்பு. தமிழர்களாகிய நமக்கு எறும்பு > எறும்பியல் எளிது. எளிதாகப் புரிந்துகொள்ளுகின்றோம். நாம் ஆங்கிலச்சொல்லை அப்படியே ஏற்றுப் பயன்கொள்ளாவிடினும், ஆங்கிலேயனுக்குமே (ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவன்) myrmecology என்பது தக்க சிறப்பறிவில்லாமல் விளங்காதன்றோ? அன்றாட அல்லது இயல் ஆங்கில மொழியில் இல்லாத சொல் myrmex என்னும் சொல். அவர்கள் ஒருகால் தங்கள் மொழியில் antology என்றெழுதியிருந்தால் (இது பொருந்துமா, வேறு குழப்பம் உருவாக்குமா என்றறியேன்) சராசரி ஆங்கிலேயனும் சிறப்பறிவு இல்லாமல் இது ant பற்றிய இயல் என்று புரிந்துகொள்ளுவான் இதனை mər–mə–ˈkä–lə–jē (மர்–ம–கா–ல–ஜி) என்றொலிப்பார்கள் என்று மெரியம்–வெபுசிட்டர் அகரமுதலி சொல்லுகின்றது.







# வள்ளுவம்

28

## மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார்

### 3. பொருள் நிலை . . .

### செல்வப் பேரன்பர்களே !

அம்மா ! குழந்தை பிழைக்க வேண்டும். வல்லுணவு ஆகா நீருணவே கொடு. மெலிவு பாராதே. நாட் பொறு என மருத்துவன் வாய்ப்பச் சொல்லுகிறன். கொழுத்த உணவு திணித்த தாயன்பே இப்போது குறைந்த உணவு கொடுத்தற்குக் காரணமாகி நிற்கிறது. தன் மகவு பருக்காவிடினும் நலமாக வாழ்க என்று அவ்வன்பு அறிவுறுத்துகிறது. நோய்க்குக் காரணமாகிய தாயன்பை நோய் நீக்கத்திற்கு மருத்துவன் காரணமாக்கிக் கொண்டாற்போல, வள்ளுவரும் மனமாசிற்குக் காரணமாய மக்களின் பொருட் பற்றையே, அன்னோர் மாசு நீக்கத்திற்கும் காரணமாக்கிக் கொண்டார். இஃதோர் வள்ளுவப் புதுநெறி.

அக்காமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள் (1178)

தன் செல்வம் குறையாமைக்கு வழி பிறன் செல்வத்தைக் கவர விரும்பாமை என்பர். தனக்கு நல்லது வேண்டா, செல்வம் வேண்டா என்று துணிந்தவனே அழுக்காறு கொள்வான் என்பர். தன் பொருள் அழிவு சுட்டி, ஆகாப் பொருட்பற்றைக் குறைப்பர். அச்சுறுத்தி மனமாசு படாது காப்பர்.

பொருளாவது ஓர் உலகக் கருவி. – அக் கருவி குணம் பெருக்கவும் குறை நிரப்பவும் பயன்படவேண்டும். பொரு ளாவது பண்டமாற்றும் பொதுக்கருவி என்ற அறிவுத் தெளிவு என்றும் வேண்டும். புறப்பொருளெல்லாம் நல்ல தற்கும் தீயதற்கும் பயன்படுதல், ஆளும் மனிதனின் நல்ல தீய மனத்தைச் சார்ந்தது. குணமும் குற்றமும் பொருள் மேலனவல்ல; அதனை ஆள்வான் மேலன. செல்வப் பொருள் தீமைக்கே கருவியாதலை வள்ளுவர் கண்டார். உடைமை உடையானை அழிப்பதைக் கண்டார்.

உடையான் தான் அழிவதை உணராது மகிழ்வதையும் கண்டார். தன்னைத்தானே வஞ்சித்துக் கொள்வதையும் கண்டார். வரைவின் மகளிர், கள்ளுண்ணாமை, அதிகாரங்கள் சான்றாதல் காண்க. நல்ல தொன்றினைத் தம் நன்மைக்குப் பயன்கொள்ள அறியா மக்கள் இழிநிலை கண்டு கவன்று,

ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல் !
நன்றெய்தி வாழ்வதோ ராறு

எனப் பொருளழிவு காட்டித் திருத்துவர்.

கல்வியறிவுடையாருங்கூடப் பொருள்மேல் (932)

ஆரா வேட்கையராய்ப் பேதையரோடு ஒருதரமாய் மாசுபட்டும் செல்வம் திரட்ட முயல்வதைக் காண்கின்றோம். பேதை இல்லாத் தம் நுட்ப அறிவையெல்லாம், தீய நெறியில் பொருளீட்டம் ஒன்றுக்கே ஆனக் காண்கின்றேம். முறைப்படி களவு செய்வது எப்படி ? சட்டத்திற்கு உட்பட்டுப் பிறரை வெஃகுவது எப்படி ? வரி கொடாது பணத்தைப் பதுக்குவது எப்படி ? எனவாங்கு நுண்ணிய நுழைபுலச் செல்வராகக் காண்கின்றோம். காமத்திற்குக் கண்ணில்லை என்பதுபோலப் பொருளுக்கு ஓர் ஒழுக்கமில்லை என்று காண் துறந்து அறங்கூறக் காண்கின்றோம். பொருளுலகம் வேறு, நூலுலகம் வேறு என மனக்கொலை செய்யக் காண்கின்றோம். இனைய அறிஞர்களே பிறரெல்லாம் தம்மாட்டு ஒழுங்காக காணயமாகப் பொய் புரட்டின்றி நடந்து கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கவும் காண்கின்றோம். கல்வி அறிவெல்லாம் உப்பு வீழ் பால்போலத் திரிந்து நிற்ப, நன்மக்களும் அழுக்குற்றுப் பொருள் வேட்டையாடக் கண்ட வள்ளுவர், 'அஃகியகன்ற அறிவு என்னாம் ' (175) கடிந்துரைப்பர். பொருளாற்றலுக்கும் என்று ஓரெல்லையுண்டு.என் அதன் நன்மை தீமைக்கும் ஒரெல்லையுண்டு. பொருளாற்றல் அஃதுடையான் ஆற்றலைப் பொறுத்தது. அவனாற்றலுக்கும் ஒரெல்லையுண்டு. 'எல்லாம் பொருளால் ஆம்பது இன்றியமையாமை காட்டும் ஒரு தொடர். குழந்தைப் பேறு உடையார்க்குக் குறைவில்லை என்பதை ஒப்பது. *பொருளிலார்க்கு இவ்வுலகம் என்றதனால் அஃதுடை-யார்க்கு இவ்வுலகம் முற்றும் உண்டு என்பது கருத்தன் காண். "பொய்யனேன் கான் உண்டு உடுத்து தானேன் !! என மெய்யன்பர் சுட்டியபடி, கேவ ஊனோம்பும் வாழ்க்கை எம்மக்களின் குறிக்கோளும் என்று. உலக நல்வாழ்விற்குப் பொருளோடு, பொருளினும் பல பண்புகள் இன்றியமையாதன. அப் பண்புகள் இருப்பின் பொருள் நலஞ் செய்யும் : இன்றேல், பொருள் உடையானைக் கீழறுக்கும்.

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்ளும் !
தகைமாண்ட தக்கார் செறின்

எந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து வேந்தனும்
வேந்து கெடும்

பொருளாற்றலுக்கு ஓர் அளவு காட்டும் குறள்கள் இவை.

*வளரும் . . . . .*



# தமிழன்னை நான்மணிமாலை

*செம்மொழிக்கவிஞர்* மெய்ஞானி பிரபாகரபாபு

சங்க இலக்கிய ஆய்வறிஞர்

63

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை.

எவ்வகையிலும் எப்பொழுதும் எவருக்கும் மனம் அறிந்து மாண்பு அற்றதைச் செய்யாமல் இருப்பதே சிறப்பு என்பது அறப்புலவர் திருவள்ளுவர் கூற்று. நல்வழியில் நடக்க வேண்டும், இக்குறளின் உள்ளார்ந்த அறக்கருத்தினை ஏற்று. குற்றம் சிறிதே இருப்பினும் இதனை ஆழ்ந்து உணர்ந்து கற்றுத் திருந்துதல் நன்று. சிறப்பாக வாழ்ந்து செல்லலாம் இப்பிறவி வாழ்வினை வென்று. எந்த வகையிலும் எந்தச்சூழலிலும் எவராக இருப்பினும் மனத்தாலும் தீங்கு செய்தல் கூடாது. அவ்வாறு வாழ்பவர்க்கு உலகில் ஈடேது. அறிவு பெற்றதன் சிறப்பே பிற உயிரின் துன்பத்தை அறிவதே; அதற்கேற்ப இயன்றவரை நன்மை புரிவதே. மிகப்பெரும் சிறப்பு வருகிறது என்றாலும் பிறருக்குத் துன்பம் செய்யாமல் இருப்பதே சான்றோர் கொள்கை. வலிந்து குற்றம் செய்யின் பின்னாளில் கிட்டுவதோ அருளில்லா இருட்குகை. சினம் மேலோங்கும்போது துன்பம் செய்பவர் பலர். சினத்தைக் காத்துத் துன்பம் தருவதைத் தவிர்ப்பவரோ வெகு சிலர். வாய்மை நழுவிடுவோருக்கு நெஞ்சத்தில் கயமையே கருவாகும். உண்மையைப் புதைத்துச் சூழ்ச்சி செய்தால் வாழ்நாளில் இறுதிவரை மீளமுடியாத் துன்பமே உருவாகும். தமிழன்னை வள்ளுவம் வாயிலாக நன்னெறியை உணர்த்தினாள். என்னை மேலும் உயர்த்தினாள். இதோ அன்னைக்கு என் அருமைமிகு நான்மணிமாலை!

## அகவல்

செயல்கள் எதிலும் சிறக்கவும் ஆற்றலில்
உயரவும் எனக்கோர் உதவியும் செய்தனள்
என்னிடம் நெஞ்சம் இளகினாள் அன்னை
அன்னையின் அருளால் அடைந்தேன் நற்பெயர்

பதிற்றுப் பத்தில் பத்து மன்னரின்
மதிப்பைப் பாடி மாண்புகள் விளக்கிக்
கொடையும் மறமும் கொள்கையும் சிறப்பும்
மிடைந்தே வைத்தனர் மேன்மையாய் நூறு

அதன்முதல் பத்தோ அகப்படா தானதாம்
உதியன் ஆற்றல் உரைப்பதாம் என்பர்
இயற்றியோர் பெயர்குறித் தேதும் அறியார்
நயமுடைத் தாக நலமிக வானதாம்

இரண்டாம் பத்தோ இமய வரம்பன்
பரந்த புகழைப் பகர்வது தானே
நெடுஞ்சேர லாதன் நெடிய புகழோ
எடுத்துக் கூறல் இனியதே காண்க

இமயந் தன்னில் எழில்வில் பொறித்தவன்
குமட்டூர் கண்ணனார் கூறினார் அன்றே
இசைபட வாழ்ந்த இனிமை
வசையிலாப் பெருமை வரமுடன் பெற்றே.

## 67

## வெண்பா

பெற்றேன் உயர்ந்த பெருமை எதனிலும்
உற்றேன் மிகுந்த உவப்பினைக் – கற்றேன்
அழியாத கல்வியை ஆற்றலால் நாளும்
பொழிந்தேன்நற் பாக்கள் புனைந்து.

## கலித்துறை

புனைந்தேன் பலவாய்ப் புரைதீர் படைப்பே
புகழுறவே
நனைந்தேன் வழுத்தும் நலமார்ப் பெரியோர்
நளிர்மொழியில்
முனைந்தேன் பெரிதும் முயன்றேன் உழைப்பால்
முகமலர்ந்தே
வனைந்தேன் புதிதாய் வடித்தேன் நறும்பா
வகைகளிலே!

## விருத்தம்

வகைமை அறிந்தே வார்ப்பும் செய்தேன்
வலிமை பெற்றேன் வசையிலதாய்த்
தகைமை அடைந்தே தக்கோர் உறவில்
தயக்கம் நீக்கித் தடையுடைத்தே
பகைமை அகற்றிப் பசுமை பெருக்கிப்
பகிர்ந்தேன் உணர்வைப் பணிவுடனே
தொகைமை செய்தேன் துறைகள் எதிலும்
துலங்கித் திகழ்ந்தேன் துடிப்புடனே!



மருத்துவமாமணி தாரா நடராசன்



## மனையில் கிடைக்கும் மருந்து

"வீட்டு வைத்தியம்" எனும் அரிய நூலை நான் முழுவதுமாகப் படித்தேன். நாம் பாட்டி வைத்தியம்' என்று அழைக்கும் வீட்டு மருந்துகள் எல்லாவற்றையும் அவற்றின் மூலப் பொருள்களின் விகிதாசாரங்களுடன் ஆசிரியர் வழங்கியிருக்கிறார். மிக மிக விரிவாக எடுத்தாளப்பட்ட நூல். நான் வெகுவாக இந்த முயற்சியைப் பாராட்டுகிறேன்.

குறிப்பாக, அல்லோபதி மருந்துகள் பலவற்றின் அடிப்படை மூலப் பொருள்கள் யாவும் நமது பண்டைய கால சித்தமருத்துவத்தின் மூலப்பொருள்களையே கொண்டிருப்பது நமக்கு எல்லாம் ஏதோ ஒரு புதிய பாடத்தைச் சொல்லுகிறது. அதைப் பற்றி எழுத்தாளரின் முகவுரையில் காணலாம்.

அடுத்ததாக மொழிபெயர்ப்பாளர் மிக்க கருத்தோடு செய்திருக்கும் மொழிபெயர்ப்பைப் பாராட்டுகிறேன். மொழிபெயர்ப்பு என்பது சொல்லுக்குச் சொல் என்றோ வாக்கியத்திற்கு வாக்கியம் என்றோ செய்யப்படுவதில்லை. அப்படி இரு மொழிகளிலும் ஒரே பொருளை அதன் உரிய பொருளில்குறிக்கும் சொற்கள் அகப்படுவதில்லை. மொழிபெயர்ப்பை நான் பாராட்டுவதற்குக் காரணங்கள்.

எளிமையான சொற்கள் – மிக இயல்பாக படித்துச் செல்லும் வகையில் எளிய வாக்கியங்கள். ( ஒரு வாக்கியத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வினைச் சொல் கிடையாது.

ஆங்கில மூலத்தின் பொருளும் உணர்வும் முழுமையாக மொழிபெயர்க்கப்பட்டநூலில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதுவே மொழிபெயர்ப்பின் வெற்றிக்குக் காரணம்.

ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமானால், மொழிபெயர்ப்பு, Friendly, Facile and Fluent ஆக இருக்கிறது.

இன்றைய காலங்களில் வீட்டு வைத்தியம் தெரிந்த பாட்டிகளும் இல்லை. அவர்கள் தயாரித்துக் கொடுத்த வழிமுறைகளும்,கை மருந்துகளும் இல்லை. அந்தக் குறையை அறவே போக்கிட வீட்டு வைத்தியம் நூல் பெரிதும் தேவைப்படுகிறது. இதை ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீட்டிற்கும் வைத்து படித்துப் பேணலாம்

அன்புடன்

தாரா நடராசன் 23 6 2016





திரு. இரா. குமரவேலன்



## CHAPTER 3

## BHARATAN AS REGARDED BY THE HERO OF THE EPIC

On another occasion, the poet compares Lakshamana with Bharata who was waiting for the return of Rama:

வரதன் போய் மறுகா நின்ற மனத்தினன் மாயத்தோனைச்
சரதப் போர் வென்று மீளுந் தருமமே தாங்க வென்பான்
விரதம் பூண் டுயிரி னேடுந் தன்னுடை மீட்சி நோக்கும்
பரதன் போன் றிருந்தான் றம்பி வருகின்ற பரிசைப் பார்த்தான்

rama's magnaanimous treatment of his brother Bharata is unique. When his father descended from the heaven and embraced him on the battlefield in lanka after the fire Ordeal of Sita, Rama asked Dasarata to revoke the curse which he ( Dasarata ) had pronounced on Bharata and his mother Kaikeyi.

ஆயினும் முனக் கமைந்த தொன்றுரை யென வழகன்
தீய னென்றுநீ துறந்தவென் தெய்வமும் மகனும்
தாயுந் தம்பியுமாம் வரந் தருகெனத் தாழ்ந்தான்
வாய்திறந் தெழுந் தார்த்தன உயிரெல்லாம் வழுத்தி

Rama's regard of his brother bharata and his mother kaikeyi was so high that, even after fourteen years he thought of them with great regard and requested his father to call back the courses on them. Thus the sin for which Bharata pined so much from the day of Rama's exile had been removed.

Rama could not pay a better compliment to Bharata then this. The way in which Bharata then this. The way in which Bharata showed his affection to Rama and his conduct at the time of Rama's exile should have moved the heart of rama very much and this led Rama request his father to cancel the curses on bharata and his mother.

Fourteen years had passed since Rama left Ayodhya and the Devas informed Rama of his completion of the exile period and directed him that he should immediately return to his city lest Bharata should fall into the fire. He was sure that if Bharata died nobody would be there to say the name of their race. So he requested Vibishana to arrange for the immediate departure and sent Hanuman in advance to Bharata and requested him to tell him of his safety and to extinguish the fire which Bharata would have kindled in order to carry out his pledge. This shows the great belief that Rama had in Bharata.

In Valmiki, Rama told hanuman to note the feelings and expressions when Bharata heard the news of his return. There Rama had a doubt in the sincerity of bharata but in kamban, Rama had no such doubt and was certain that Bharata would fall in the fire if he failed to go back in time.

hanuman as directed by rama, hurried to ayodhya and found Bharata about to fall into the fire. He told him of Rama's arrival and extinguished the fire.

When Rama returned to Ayodhya, Bharata felt as if he had seen his father himself returned to life and fell at his fest. Rama took him up and embraced him but was unable to utter a word in the intensity of his grief and joy.

ஊனுடை யாக்கை விட் டுண்மை வேண்டிய
வானுடைத் தந்தையார் வரவு கண்டெனக்
கானிடைப் போகிய கமலக் கண்ணனைத்
தானுடை யுயிரினைத் தம்பி நோக்கினான்

Tears flowed unceasingly from Rama's eyes at the sight of the twisted knots of hair on the head of Bharata which had never bien untied all these fourteen years. These tears and the love of Rama's heart which was like that of a cow for its calf were enough for compensation to the heart of Bharata for his mental anguish from the moment he heard of Rama's exile.

தழுவின னின்ற காலைத் தத்தாவீ ழருவி காலும்
விழுமலர்க் கண்ணீர் மூரி வெள்ளத்தான் முருகின் செவ்வி
வழுவுறப் பின்னி மூசு மாசுண்ட சடையின் மாலை
கழுவின னுச்சி மோந்து கன்று காண் கறவை யன்னன்

Rama, who affectionately held Bharata in his heart all these fourteen years without forgetting him even for a single moment was crowned as the king of Ayodhya and only this gave Bharata great satisfaction and delight.

***To Continue……***



# பூமழை

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 5–ஆவது ஆண்டு நினைவு நாளையொட்டி வெளியிடப்பட்டிருக்கும் முகப்புப் படம் பொருத்தமாக உள்ளது.



கலைஞர் அவர்களின் இளமைக் காலம் தொட்டு முதுமை காலம் வரையிலான ஒளிப் படங்களை பார்க்கும் வாய்ப்பு 09.08.2023 அன்று வெளியான 192–ஆவது உலகத்தமிழ் மின்னிதழில் பார்க்கும் வாய்ப்பினைப் பெரும் வாய்ப்பாக நான் உணர்கிறேன்.

தமிழ் வளர்ச்சித் துறை, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கொண்டு நடத்திய நிகழ்ச்சியின் ஒளிப்படங்களை அழகு மாலையாக முகப்பு படத்தில் அணிவித்திருப்பதும் அழகுக்கு அழகு தருகிறது...

இந்த வார இதழின் முதல் பகுதியான கொள்கை விளக்கக் குறிப்புப் பகுதியில் சென்னை, அடையாறு, ராஜரத்தினம் அரங்கம், முத்தமிழ்ப் பேரவையில் 14.01.2023 முதல் 17.01.2023 வரை நடத்தப்பட்ட தமிழ் இலக்கியச் சங்கமம் நிகழ்ச்சி பற்றிய செய்தி படித்து மகிழ்ந்தேன்.

உலகத் தாய் மொழி நாள் விழா 21.02.2023 அன்று நடத்தப்பட்ட நிகழ்ச்சியின் பதிவையும் படித்து மகிழ்ந்தேன்.

கடந்த 14.03.2022 இல் 39 தமிழ் அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கிய செய்தியும் மகிழ்ச்சியைத் தந்தது.

இந்த விருதுகளுக்கான தொகை ஒர் விருதுக்கு ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டு இருப்பது விருதாளர்களுக்கு பெரும் மகிழ்ச்சியைத்தான் தரும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

இப்படித் தமிழ்ச் சான்றோர்களுக்கு எண்ணற்ற விருதுகளை வழங்கி வருவது வரவேற்கத் தக்கதே...

வாரந்தோறும் வெளியாகும் நூலேணி பகுதியில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வெளியீடுகளின் பட்டியலைத் தொடர்ந்து பார்க்க முடிகிறது.

அடுத்ததாக மகாகவி பாரதி, பாவேந்தர் பாரதிதாசன் ஆகிய பெருங்கவிஞர்களின் கவிதை வரிகளோடு வெளிவந்து கொண்டிருக்கும் தமிழெழுச்சி பகுதியும் சிறப்பான பகுதியாகத்தான் பார்க்கப்படுகிறது.

நான் ஏற்கனவே கடந்த வாரங்களில் பதிவு செய்திருப்பது போல இந்த உலகத்தமிழ் மின்னிதழில் ஆசிரியம் என்ற பகுதியும், அவ்வப்போது என்ற பகுதியும் மிகச் சிறப்பான பகுதிகளாகத் தொடர்ந்து பார்க்கப்பட்டு வருகிறது.

மறைந்து போய்விட்டதா மனித நேயம்? என்ற தலைப்பில் இந்த வாரம் ஆசிரியம் பகுதியில் எழுதப்பட்டிருப்பதை நான் மிக ஆழமாக படித்தேன்.

அன்பு, கனிவு, இரக்கம், சக மனித உறவு இவைகளை இழந்துவிட்ட அரசியலை எதிர்கால சந்ததிகளுக்கு நாம் விட்டுச் சென்று விடக்கூடாது என்கின்ற கருத்தோடு இந்து நாளிதழில் ஜூலை 31 அன்று வெளியான கட்டுரையினைச் சுட்டிக்காட்டி ஆசிரியம் பகுதியில் வெளியிடப்பட்டிருக்கின்றதைப் படிக்கையில் மிகுந்த மன வலிதான் ஏற்பட்டது.

இன்றைய நாகரிக உலகில் கூட மனித நேயமற்ற பல நிகழ்வுகள், பல இடங்களில் நடந்து வருவதை நாம் பார்க்கிறோம்...

நடந்து வருவதை என்பதைக் கூட பலர் நடத்தி வருகின்றனர் என்று கூடச் சொல்லலாம்... அப்படித்தான் சொல்லத் தோன்றுகிறது எனக்கு.

மனிதநேயமற்ற செயல்கள் என்பது நாகரிக உலகிற்கு, விஞ்ஞான வளர்ச்சியுற்ற இந்த காலத்திற்கு தேவைதானா என்பதை நாம் ஆழ்ந்து பார்க்க வேண்டியதாக உள்ளது.

உலகத்தை விடுத்து நமது இந்திய நாட்டைப் பார்ப்போம்...

***தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .***







அண்மைக்காலமாக நமது நாட்டின் ஒரு பகுதியான மணிப்பூர் மாநிலத்தில் நடந்து வரும் மனிதநேயமற்ற, அநாகரிகமான செயல்கள் நம்மை எந்த அளவிற்கு வருத்தமடைய செய்திருக்கிறது என்பதை வார்த்தைகளால் சொல்ல முடியவில்லை...

அறிவு விசாலப்பட வேண்டும்... அன்பு பரவலாக்கப்பட வேண்டும்... பள்ளிக்கூட பாடங்கள், கலை, இலக்கியங்கள் மனிதனை மேம்படுத்த வேண்டும் என்பதை நான் அழுத்தமாக சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குச் சான்றாக ஆசிரியம் பகுதியில் உள்ள அமெரிக்கப் பாடகர் பீட்சீஜர் என்பவரின் பாடல் வரிகளை மீண்டும் பதிவு செய்ய விரும்புகிறேன்...

"பாடல்கள் பதுங்கி மறைந்து பரவக்கூடியவை; அதற்கு நாடுகளை பிரிக்கும் எல்லைகள் இல்லை; சிறைகளிலும் விரைவில் வேகமாய்ப் படர்ந்து வளரும்; கடின உறைகளையும் ஊடுருவிடும்... மிகச் சரியான கவிதை, சரியான தருணத்தில் சகாப்தங்களைச் சரித்து சரித்திரங்களை மாற்றிவிடும்"

அடுத்த பகுதியான அவ்வப்போது பகுதியில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் அவர்களின் உரையை பார்க்கிறோம்... அருமையான உரை...

தமிழ் மொழியின் தொன்மைக்கு சங்க கால இலக்கியங்களின் தமிழ்ச் சொற்கள் இன்றளவும் புழக்கத்தில் இருப்பதை பல சொற்களை எடுத்துக்காட்டுகளாய்ச் சொல்லி மொழியின் சிறப்பை அருமையாக பதிவு செய்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அற்புதமான உரைக்கு வாழ்த்துகள்.

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தமிழ் வளர்ச்சி இயக்கம் என தமிழ் வளர்ச்சித் துறை 28.05.1971 இல் தொடங்கப்பட்டிருப்பதையும் சுட்டி காட்டி இருக்கிறார் அமைச்சர் அவர்கள்.

தேன்துளி– 1–ல் அறிஞர் ஆல்பிரிட் அவர்களின் தோளோடு தோள் தொட்டபடியே நடப்போம் என்கின்ற அருமையான வரியினை படித்து மகிழ்ச்சியுற்றேன்.

மறைமலையடிகள் அவர்களின் தனித்தமிழ் மாட்சியில் அறிவின் நுட்பம் பற்றி திருக்குறள்களோடு சொல்லிச் செல்லும் பாங்கு பாராட்டுக்கு உரியது.

முனைவர் தேவி நாச்சியப்பன் அவர்கள் தொடர்ந்து குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் குறித்து பல அறிஞர்கள், சான்றோர்கள், கவிஞர்கள் எழுதியிருக்கும் கட்டுரைகளைத் தொகுத்து தந்து கொண்டிருக்கும் வரிசையில் இந்த வாரம் 17.04.2002–ல் சேது என்ற ராம. ராமசாமி எழுதிய கட்டுரையைப் பதிவு செய்திருக்கிறார்.

இப்படி ஒவ்வொரு அறிஞர்களின் கட்டுரைகளை வெளியிடுவதன் மூலமாக குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா எந்த அளவிற்கு கொண்டாடப்பட்டிருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

செவ்விசை மாமணி திருமதி சீதை மெய் கண்டான் அவர்களின் பதிகங்களை படியுங்கள் என்ற பகுதியை படிக்கிற போது இந்த வாரம் நான் அறிந்து கொண்ட அல்லது குறிப்பிடத்தக்க வரியாக" கடவுள் வாழ்த்துப் பாடும் மரபு தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்தே இருந்ததற்கு தொல்காப்பியமே சான்றாகும்" என்ற வரியைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தாய்ப்பால் வார காலமாக இருப்பதால் அது தொடர்பான ஒரு பகுதியை ஆசிரியர் வெளியிட்டு இருப்பது சிறப்பு...

"தாய்ப்பால் ஆயுட்கால பரிசு" என 16 .09 .2012–ல் ஆண்டில் வெளியான கல்கி வார இதழில் மருத்துவ மாமணி தாரா நடராசன் அவர்கள் எழுதிய தாய்ப்பால் பற்றிய கட்டுரையை தேர்ந்தெடுத்து, தேடி எடுத்து பதிவு செய்திருந்த விதம் அற்புதம். பயனுள்ள பதிவுதான்.

*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .*





தொடர்ந்து கட்டுரைகளை எழுதி வரும் முனைவர் தேவி நாச்சியப்பன் கடந்த இரண்டு வாரங்களாக பூமழையிலும் நுழைந்திருக்கிறார் என்பது மகிழ்ச்சிக்குரியதாக நான் பார்க்கிறேன்... தொடருங்கள் அம்மா.

உலகத் தமிழ் மின்னிதழில் வாரம் தோறும் மூத்த தமிழறிஞர் ஔவை நடராசன் அவர்களுக்கான புகழ் வணக்கம் பகுதி வெளியாகி வருவதை நாம் பார்த்து வருகிறோம்...

அம்மையார் தி.வே. விஜயலட்சுமி கடந்த வாரத்தைப் போல இந்த வாரமும் புகழ் வணக்கம் பகுதியில் கட்டுரையை தொடர்ந்திருக்கிறார்.

தமிழறிஞர் ஔவை நடராசன் அவர்களைப் பற்றி விஜயலட்சுமி அவர்கள் குறிப்பிடும் செய்திகள் எல்லாம் நமக்கு மிக வியப்பைத் தருகிறது.

ஐயாவிடம் சென்று, விஜயலட்சுமி அம்மையார் எழுதிய கட்டுரைகளை காட்டுகிற போதும், ஐயாவிடம் அம்மையார் ஆலோசனை செய்கிற போதும் ஐயா அவர்கள் நடந்து கொள்ளும் முறை மிக வியப்பாக இருப்பதாக நான் பார்க்கிறேன்...பாராட்டும்விதமாக உள்ளது.

அம்மையாரின் கட்டுரைகளை படித்துவிட்டு, ஐயா அவர்கள் "அம்மா எனக்கு இந்நாள் வரை தோன்றாத கருத்துக்கள் தங்களுக்கு எப்படி தோன்றின" என வியந்து சொன்ன அந்த வரிகளை நான் பார்த்து ஆச்சரியப்பட்டு போனேன்... எவ்வளவு பெரிய மனம் இருந்திருந்தால் இப்படி பாராட்ட மனம் வந்திருக்கும்...

அம்மையார் அவர்கள் எழுதுகிற கட்டுரைகளை வாசித்துவிட்டு பாராட்டி மகிழும் ஐயாவின் அற்புத குணங்களையெல்லாம் இந்த கட்டுரையில் படித்து நெகிழ்ந்து போகிறேன் நான்.

ஐயா ஔவை நடராசனாரின் பிறருக்கு உதவிடும் குணம் குறித்து "கைம்மாறு கருதாத கடப்பாட்டினர்" என புகழாரம் சூட்டுகிறார் அம்மையார்.

ஐயாவை மட்டுமின்றி மருத்துவ மாமணி தாரா நடராசன் அவர்களையும்,

"இல்லாது என இல்லவன் மாண்பானால்" என்ற குறள் வரியால் போற்றுகிறார்.

அந்த கட்டுரையில்... இந்த வாரம் இறுதியில் அவர் இப்படி குறிப்பிடுகிறார்...

"1330 அல்லது 130 குறட்பாக்களுக்காவது ஐயா அவர்களின் சிந்தனையுரை கேட்டு அதை நூலாக வடிவமைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கடவுள் வாழ்த்து என்கின்ற முதல் பகுதியில் ஐயா அவர்களின் உரையை கேட்டதாகவும் ...அதற்கு பிறகு கேட்க முடியாத நிலை... ஐயா அவர்கள் உடல் நலிவுற்று விட்டதால் முடியாமல் போனதாக குறிப்பிட்டு, அவரது திருமகனார் முனைவர் ஔவை ந. அருள் அவர்கள் நான் நினைத்த அந்தப் பணியை செய்து முடிப்பார் என நம்புகிறேன்"...

தி.வே.விஜயலட்சுமி அவர்களின் வேண்டுகோளை ஏற்கும் பக்குவம் பெற்றவர்தான் முனைவர் ந. அருள் அவர்கள்.

ஆயினும் அவருக்கான பணிகளுக்கு இடையே... ஏகப்பட்ட பணிகளுக்கு இடையே... இந்த பணியையும் அவரால் முடியுமா என்பது குறித்து எனக்கு ஐயம் ஏற்படுகிறது. எதுவானாலும் நல்லது தான்.

நிறைவுப் பகுதியாக தமிழ் வளர்ச்சித் துறையின் ஆட்சி மொழிச் சட்ட வார இராமநாதபுரம், திருச்சி மாவட்ட நிகழ்வுகளின் ஒளிப்படங்களோடு வெளியிருப்பதை பார்த்தேன்...

நன்றி.

கவிஞர் பேரா, திருநெல்வேலி.

தலைவர்,

பொதிகைத் தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி.



# பூமழை

192– முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி அவரது இளமை முதலான பல தோற்றங்கள் முகப்பை அலங்கரிக்கின்றன. தமிழறிஞர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்குதலும் விருதுத் தொகை இரண்டு லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ள செய்தியும் கொள்கை விளக்கக் குறிப்பில் இடம் பெற்றுள்ளது.

ஆசிரியம் பகுதியில் "மறைந்து போய்விட்டதா மனித நேயம்" கட்டுரை அருமை.
நம் தமிழ் காட்சி மொழியாக அல்லாமல் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்ற கலைஞரின் கனவை நனவாக்கும் முயற்சியில் தமிழ் வளர்ச்சித் துறை பணியாற்றி வருவதை,மாண்பமை அமைச்சர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டுள்ளது முற்றிலும் உண்மை;தமிழுக்குப் பெருமை.

தேன்துளி 1 – நண்பர்களாகத் தோள் தொட்டபடியே நடப்போம் – நெஞ்சை அள்ளும் கவிதை.

தேன்துளி 2 – போலந்து நாட்டுக் கவிஞரின் அரசியல் பார்வை உண்மை.

மறைமலையடிகள் தம் கட்டுரையில் உலக நூற்கல்வியின்றி எந்தத் தொழிலையும் நலத்தையும் அடைய முடியாதென உணர்த்துகிறார்.
செவ்விசை மாமணி திருமதி சீதை மெய்கண்டான் அவர்கள் சோழமன்னன் சேக்கிழாருக்குப் பட்டமளித்து,ஞானமுடி சூட்டி யானை மீதேற்றி தானே கவரி வீசிய வரலாற்றை அழகுற எழுதியுள்ளார்.இதன் வழி, மன்னர்கள் தமிழையும் புலவர்களையும் போற்றி வளர்த்தனர் என்பது புலனாகிறது.

இன்று அப்பணியை தமிழக அரசும் தமிழ் வளர்ச்சித் துறையும் செய்து வருவது போற்றுதற்குரியது.

மருத்துவ மாமணி திருமதி தாரா நடராசன் அவர்கள் இக்கால இளம் தாய்மார்களுக்கு,தாய்ப் பாலின் அருமை குறித்த அருமையான விளக்கங்களையும் வழி காட்டுதலையும் வழங்கியுள்ளார். சிறப்பு.

புலவர் தி.வே.விஜயலட்சுமி அவர்கள் ஔவை நடராசனார்,அவர் தம் அன்பு இணையர் தாரா நடராசன் இருவரது சிறப்புகளை 4 பக்கங்கள் இனிமையாக எழுதியுள்ளார்.

தமிழ் வளர்ச்சித் துறையின் அரும்பணிகளை விளக்கும் விதமாக தமிழ் ஆட்சி மொழிச் சட்ட வாரம் படங்கள் அழகுற அமைந்துள்ளன. மகிழ்ச்சி.





# பூமழை

அன்புள்ள அம்மா (தி. வே. விஜயலட்சுமி),

வணக்கம்!

09.08.2023 உலகத்தமிழ் மின்னிதழில் வெளிவந்துள்ள கட்டுரையினைப் படித்து நெகிழ்ந்தேன்!

பெருமகனார் தெய்வத்திரு ஔவை ஐயாவிற்குப் புகழ் வணக்கம் செலுத்தியுள்ள தாங்கள் மறவாமல் எனது பெயரினையும் ஒரு வரியில் குறிப்பிட்டுள்ளீர்கள்!

மிக்க நன்றி!

உண்மையிலேயே

அஃதோர் பொற்காலமே!

அக்காலம் இனி என்றுமே வரப்போவதில்லை!

போகிற போக்கில்

ஒரு கூற்றினை அழுத்தந் திருத்தமாகக் கூறிவிட்டு, ஔவை ஐயாவிடம்

தப்பித்துப் போய் விடமுடியாது!

"எதனை வைத்து இப்படிக் கூறுகிறீர்கள்?

எங்கே ஏதேனும் சான்று ஒன்று கூறுங்கள் பார்க்கலாம்!

எங்கே எந்த நூலில் இதனைக் கற்றீர்கள்?

அப்படியா, நான் இப்படியல்லவா கற்றறிருந்திருக்கிறேன் என்று சொல்வதோடு நிற்காமல் உடனே மூல நூலிலிருந்து ஒரு செய்யுளினை/கட்டுரையினை மேற்கோள் காட்டி நம்மை கிறுகிறுக்க வைத்திடுவார்!

தாங்கள் "ஒரு வரியில் வள்ளுவம்" என்ற தலைப்பில் திருக்குறளுக்கு உரையெழுதத் தொடங்கிய காலத்தில் பல நாட்கள் ஐயா அலுவலகத்தில் அமைதியாக இருந்து தாங்களும் ஐயாவும் மாறி மாறி ஆழ்ந்த புலமையுடன் விவாதித்த காட்சிகள் இன்றும் எனது நெஞ்சந்தனில் பசுமைப் பொலிவுடன் உலா வருகின்றன!

இரு மொழி வித்தகர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக மேனாள் துணைவேந்தர், தாமரைத்திரு(" Padmashree") விருதாளர், கடல் கடந்தும் தமிழ் மணம் பரப்பி வந்துள்ளவர்,மேனாள் செம்மொழி ஆய்வு நிறுவனத் துணைத்தலைவர், அறநெறி வழுவாத் தமிழறிஞர், எளிமைக்கு இலக்கணமாய், இன்சொல் பண்பாளராய் இறுதிவரை வாழ்ந்து காட்டியவர் ஆகிய பல்வகைச் சிறப்புகளையும் பெற்றிருந்த ஔவை ஐயாவிடம் தாங்கள் கொண்டிருந்த பெருமதிப்பும் பேரன்பும் நன்றியும் தங்களது கட்டுரை வாயிலாக நன்கு வெளிப்படுகின்றன.

வாழ்க வாழ்க

இவ் வையந்தனில்

பல்லாண்டு தமிழ்த்

தொண்டாற்றிக் கொண்டு!

சீனி. இராசகோபாலன் (இராசாசி)

வேளச்சேரி,

சென்னை–600 042.





வாகீச கலாநிதி கி.வா.ஜ.



## *தாயின் பிரார்த்தனை . . .*

அரசிக்கு ஏவலனாக இருப்பவன் கணவன். அவள் உள்ளம் திறம்பினால் மனையில் இருள் படரும். இல்லறம் சீர்குலையும்.தமிழ் மகளாகிய தலைவி இந்தப் பன்புகளிலே தலைசிறந்தவள். தன் கணவன் நெறி பிறழ்ந்து ஒழுகு வதை உணர்ந்தும் அவள் பின்னும் ஊக்கத்தோடு இல்லற வாழ்விலே ஈடுபட்டாள். விருந்தினர்களுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்தும், இரவலர்களுக்கு ஈந்தும் வழக்கம்போல் இல்லறச் செயல்களை நடத்தி வந்தாள். பொருள் ஈட்டும்பொருட்டு வீட்டுத் தலைவன் வெளியூருக்குச் சென்று சில மாதங்கள் தங்கினால் அப்போது இல்லறம் தடைபடாது நடத்துவது அவள் அல்லவா ? அதே நிலையில் இப்பொழுதும் நடத்தி வந்தாள். அவன் வீட்டில் இல்லை என்ற குறையை வருவார் அறியாதபடி அறம் வளர்த்தாள்.

ஆனாலும் அவன் பெண் தானே ? தன் உள்ள கோயிலில் வைத்துப் பூசிக்கும் தெய்வத்துக்கு அருகிருந்து தொண்டு புரியும் ஆசை எழாதா ? ஊரார் அறியாமல் அவர்கள் இருவரும் பழகிவந்த காலம் அவளுக்கு நினைவுக்கு வந்தது. அப்போது களவொழுக்கத்திலே அவர்களுக்கு இடையிடையே ஒரு நாள் இரண்டு நாள் பிரிந்து வாழ்வது துன்பமாக இருந்தது. அதனால் என்றும் பிரிவின்றி வாழவேண்டுமென்று எண்ணி உலகறிய மணம் புரிந்துகொண்டனர். அவர்கள் விருப்பம் நிறைவேறியது. நகமும் சதையும்போல ஒன்றி மனையறம் காத்து வந்தனர்.

இப்பொழுது அதற்கு இடையூறு வந்துவிட்டது. ஒன்றி வாழவேண்டிய நிலையில் பிரிவு வந்திருக்கிறது. பகலெல்லாம் அறத்தைச் செய்து பொழுது போயிற்று— இரவு வந்துவிட்டால் அவள் தானும் தனிமையுமாக இருந்தாள். அப்பொழுது அவனைப் பற்றிய நினைவு மிகுதிய: விற்று, உள்ளம் நெகிழ்ந்தது. காலையில் எழுந்தால் அவன முகம் வாடியிருக்கும். அவளுடைய தோழியரும் பிறரும் அதைப் பார்த்துக் துனுக்குறு வார்கள்,.. அவர்களுக்கு அதன் காரணம் நன்முகத் தெரித்ததுதானே ? ஆகவே அவர்களும் மனம் உளை வார்கள். தலைவன் தவறு செய்வதை நினைத்து வருந்துவார்கள். எல்லா வகையிலும் உத்தமியாகிய அந்தப் பெருமாட்டியின் உள்ளம் மறுகுவதை அவர்களால் பொறுக்க முடியவில்யே. ஆகவே அந்த வருத்தத்தாள் அவர்களுக்கு மேலோங்கி நின்றது.எழுந்தபொழுது வாடியிருந்த மனைத் தலைவியின் முகம் அடுத்த கணத்தில் மலர்த்துவிடும். வழக்கம் போல் இல்லறச் செயல்களில் ஈடுபட்டு விடுவாள். இரவெல்லாம் பெண்மையின் குழைவும் பகலெல்லாம் கற்பின் திண்மையும் அவளிடத்திலே ஒளி வீசின. “ என்ன ஆச்சரியம் ! அவனுடைய பிழையை நினையாதவள் போலவே இருக்கிறாளே ! இவளுடைய பொறுமை யாருக்கு வரும் ? தயையே இந்த உருவம். இவள் உலகத்துப் பெண்களில் ஒருத்தி அல்ல; பொறுமையின் உருவாகும் தெய்வம்: அடித்தாலும். அணைத்தாலும் அன்பு செய்யும் தாய். இவளை நாங்கள் உடன் பயிலும் தோழியாக திளைப்பது தவறு.

எவ்வளவு அறிவு பெற்றாலும் இத்தகைய பொறுமையும் மன வலிமையும் வருவது அரிது. இவன் பிராயத்தால் சிறியவளேனும் அறிவினால் முதியவள்; பெரியவன் ; எமக்குத் தாய் : இல்லறத்தின் சிறப்பை உணர நிற் பார்க்கெல்லாம் தாய் ! " என்று தோழிமாரும் பிறரும். பேசிக்கொண்டனர்.

இற்பிறப்பு என்பது ஒன்றும், இரும்பொறை என்பது ஒன்றும், கற்பெனும் பெயரது ஒன்றும் அவள் பால் களிநடம் புரியக் கண்ட அவர்கள். அவ்வாறு எண்ணியது வியப்பன்று. தன்னையும் மறந்து, தன் தலைவன் பிழையைப் பிறர் அறியாதவாறு காத்து, அறப்பெருஞ் செல்வியாக விளங்கினாள் அவள்.

*வளரும் . . . .*





36



# புகழ் வணக்கம்

## அருளுள்ளம் வாய்ந்த அழகுதமிழ்ச் சொல்வேந்தர்



– தி. வே. விஜயலட்சுமி

'தந்தையையொப்பர் மக்கள்' என்ற தொடருக்கு ஏற்ப இன்று பலப்பல பொருளும், சுவையும் புதுமையும் கொண்ட கட்டுரைகள் பல தந்தையார் ஔவை அவர்கள் சொல் நடை போன்று அருள் அவர்களே இதழ்களில் எழுதி வருவது நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருகிறது. கண்களை மூடிக் கொண்டு அவர் உரையைக் கேட்டால் ஔவை அவர்கள் குரல் எதிரொலிக்கிறது. உலகத் தமிழ் என்ற இதழும் பாரதியின் குயில் பாட்டை இசை, உரை விளக்க வடிவிலும் அளித்து வருகிறார். ஏனைய இரு திருமகன்கள் கண்ணன், பரதன் இருவரும் தாயைப் போல் மருத்துவ வல்லுநர்கள். தந்தையாரின் உடல் நிலையைக் கவனித்து வருகின்றனர். தன் குடும்பத்தைத் துணைவியார் தாரா நடராசன் அவர்களுடன் இணைந்து பல்கலைக்கழகமாக்கி வெற்றி நடைபோட்டு வீரவுரை வழங்கி மேன்மைத் தமிழால் மேதினி அளப்பவராய்த் திகழ்கிறார் சொல்வேந்தர்.

### ஔவை அவர்கள் ஆய்வுத்திறன்

கம்பராமாயணத்தில்மருத்து மலைப் படலத்தில் ஒரு பாடல் – "என்பு என்பது யாக்கை என்பது என்று தொடங்கும் என்பு, யாக்கை, உயிர், அன்பு என்ற நான்கு சொற்களையும் நான்கு மணிநேரம் ஒருநாள் எடுத்துக் கொண்டு கலந்தாய்வு செய்தோம். மனநிறைவான ஆய்வு. மறக்க முடியாத நிகழ்வு.

### கருணைக்கடல்

திரு. ஔவை அவர்கள் பாண்டிச்சேரி கம்பன் கழக பட்டிமன்ற நடுவராகச் செயற்படப் புறப்படுகிறார். தலைப்பு – இராமாயணத்தில் நம் மனத்தை உருக்க வல்லது சீதையின் புலம்பலா? தாரையின் புலம்பலா? என்னிடம் தலைப்பைக் கூறி, தங்கள் கருத்து என்ன? என்று 2014–ல் ஒருமுறை கேட்டார். நான் யோசித்தேன். நான் எதிர்பாராத விதமாக அவர் விடை கூறுகிறார். "விஜயலட்சுமியின் புலம்பலே மனம் உருக்க வல்லது" என்றார். என் இருவிழிகளினின்றும் ஆறாக நீர் பெருக்கெடுத்தது.



நான் எழுதிய கண்ணீர்க் கவிதைகள் நூலை எந்த அளவு ஆழ்ந்து படித்திருந்தால் இப்படியொரு விடை வரும் என்று எண்ணினேன். அவர் சொல்லாற்றல், நினைவாற்றல் பழகும் முறை அனைவரும் அறிவர். அதற்கும் மேலாக, அருளின் மறுவடிவமாய், மற்றவர் மனத்தைப் புரிந்து கொள்ளும் பேராற்றலும் உடையவர். தூய்மையான பரிவோடு பேசுவார் என்பதை நான் மட்டுமே அறிவேன்.

### வானொலிச் சொற்பொழிவு

ஒருமுறை சென்னை வானொலியில் ஐந்து நாட்கள் 'உரைக் களஞ்சியம்' பகுதிக்காக முனைவர் ஔவை அவர்கள் உரையாற்றினார். பெருங்காப்பியத்தின்சீர்மை, பாட்டு, தொகை நூல்கள், கம்பநாடன் கவிதை என்ற தலைப்புகள். பல நூல்களைப் படிப்பார். ஆனால் குறிப்புகள் கையில் இருக்காது. அவர்க்குமனமே ஏடு. மகிழுந்தில் செல்லும் போதும் இலக்கியச் சிந்தனை. வேறு கருத்துகள் கூறுங்கள் என்பார். அவற்றை ஏற்றுக் கொள்வார். உடல்நலம் சரியில்லையெனினும், யாவர் அழைப்பினும் மறுப்புத் தெரிவிக்காமல் கூட்டத்திற்குச் சென்று உரையாற்றத் தொடங்கின் தன் உடல்நலத்தையேமறந்துவிடுவார். அவையோரைச்சித்திரப் பாவை போய் ஆடாமல் அசையாமல் 3 மணி நேரம் தமிழ்த்தேனைப் பருக வைப்பார். இச்செயற்பாடு இவர் ஒருவரால் தான் முடியும்.

*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . . .*





# புகழ் வணக்கம்

அருளுள்ளம் வாய்ந்த அழகுதமிழ்ச் சொல்வேந்தர் . . .

## தலைவர்கள் பாராட்டு

வள்ளல் பெருமானைப் பற்றிய ஔவை அவர்கள் ஆற்றியஉரையைக் கேட்ட அருட்செல்வர் நா. மகாலிங்கனார், இவரைப்பலவாறாகப் பாராட்டி அவர் தொடங்கியஇராமலிங்கர்பணிமன்றத்தின் செயலாளர் ஆக்கினார் என்று பலர் சொல்லக்கேட்டுள்ளேன். புரட்சித் தலைவர் தமக்கு அளித்த அரிய வாய்ப்பைச் சொல்லி மகிழ்வார். அரசுத் துறையில் பதவியைத் தம் திறமையால் மட்டுமே பெற்ற அறிஞர் ஔவை நடராசன் அவர்கள் ஒருவரே என்பதை நாம் எண்ணி எண்ணி மகிழலாம். பேச்சு வன்மையால் பெற்ற விருதுகள்கணக்கில. ஆனால் தம் விருகளைப் பற்றி யாரிடமும் சொல்லிப் பெருமை கொள்ளும் எண்ணமில்லாதவர். 'நிறைகுடம் நீர் தளும்பாது' என்ற பழமொழிக்குச்சான்றாகவிளங்குபவர்.

## சிந்தனைச் சிகரம்

சொல்லாராய்ச்சியில் புகுந்து வேர்ச்சொல் தேடுவார். கிடைக்கும் வரை சிந்தனை சிறகடித்துப் பறக்கும். மனத்துயரை மாற்றி, கேட்போரைத்தன்வயப்படுத்திமலைக்க வைத்து, செதுக்கிச்சிலையாக்கிவிடுவார். கலைஞர் பேச்சின்கனித்தமிழையும், புரட்சித்தலைவரின்பொன்மனப்பண்பையும், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆளுமை பற்றியும் மணிக்கணக்கில் பேசுவார். பொழுது போவதே தெரியாது, செயல் மறந்து கேட்போம்.

## ஔவை அவர்களின் சொல்லாய்வு

ஒருநாள் திடீரென்று அவரிடமிருந்து தொலைபேசியில் வீட்டிற்கு அழைப்பு வந்தது. 'நார்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்? என்றார். ஒரு நிமிடம் யோசித்தேன். எளிய சொல்லுக்குக் கேட்க மாட்டார். அதனால் அவரிடம் 1 நிமிடம் யோசித்து விட்டு சார், நார் என்றால் அன்பு, கருணை என்று பொருள் என்றேன். சான்று என்ன? என்னை ஆழம் பார்க்கத் தான் கேட்கிறார் என்று தெரியும். குடிமை என்ற அதிகாரத்தில் வரும் "நலத்தின் கண் நாரின்மைதோன்றின்அவனைக்குலத்தின்கண்ஐயப்படும்" என்ற குறளைச் சொன்னேன். மறுமுனையில் அவர் குரல் ஒலித்தது. "இதைத்தான் எதிர்பார்த்தேன் உங்களிடம். ஓர் அணிந்துரை எழுத வேண்டும். நாளை சீக்கிரம் வந்து விடுங்கள்" என்றார். எனக்கு மகிழ்ச்சி. நூல் அணிந்துரை எழுத எந்தவொருகுறிப்பும் கையில் இல்லாமல், நூலை மட்டும் ஏந்தி அவர் சொல்லச் சொல்ல இலட்சுமி அவர்கள் தட்டச்சுச் செய்வார்கள். கட்டுரை, அணிந்துரைக்குத்தலைப்புக்கொடுப்பதில், நம் ஔவை அவர்களை மிஞ்ச இன்னொருவர் பிறக்க வேண்டும். திருப்தி வரும்வரை மாற்றிக்கொண்டேயிருப்பார். வெண்பா எழுதிக்காட்டினால் எதுகை, மோனைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுப்பார். உண்ணும்போதும், நடக்கும் போதும், ஓய்வு எடுக்கும் போதும் ஒரு கருத்தை எப்படி எப்படியெல்லாம் சொல்லலாம்? என்பதே நினைப்பு. "நடமாடும் உலகளாவிய பல்கலைக் கழகம்" என்று அவரைக்குறிப்பிடுவேன். சிரிப்பார். இல்லம்மா! இன்னும் நான் படிக்க வேண்டியது நிறைய உள்ளன என்று சொல்லி, இரு நூல்களைக்கொடுத்துப் படித்து இதன் சாராம்சத்தைக்கட்டுரையாக எழுதி வாருங்கள். எனக்கு நேரமில்லை" என்று கொடுப்பார். வாரமொருமுறைநினைவுறுத்துவார். நாம் கால தாமதம் செய்தால், மென்மையாகக் கண்டிப்பார்.

*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .*





# புகழ் வணக்கம்

அருளுள்ளம் வாய்ந்த அழகுதமிழ்ச் சொல்வேந்தர் . . .

## பரிமேலழகர்உரையில் ஈடுபாடு

ஔவை அவர்களால் ஒரு மணித்துளிகூட சிந்திக்காமல், படிக்காமல் இருக்க முடியாது. "மலர்மிசைஏகினான்" என்ற குறட்பாவில் "ஏகினான்" என்ற இறந்த காலத்தால்கூறியமைக்குப்பரிமேலழகர் கூறும் விளக்கம் என்ன? என்று தெரியாதது போல் கேட்பார். "வாராக்காலத்தும்நிகழுங்காலத்தும்" என்ற தொல்காப்பியநூற்பாவை எடுத்துக்காட்டினேன். தெளிவு பற்றி வந்த காலவழுவமைதி என்று இலக்கணமும் சொன்னேன். தமிழைப் பற்றி மட்டுமே பேசும் உங்களைப் போல ஒருவரைத் தான் தேடிக் கொண்டிருந்தேன். ஏனெனில், தமிழ்தான்எனக்குத்தெம்பை, மகிழ்ச்சியைக் கொடுக்கிறது என்று சொல்லி இன்று தொல்காப்பியப்பொருளதிகாரம், கலித்தொகை, திருவாசகம் படிக்கலாமா? என்பார். பாடலைப்பண்ணுடன் முதலில் பாடச் சொல்வார்.

"பால் நினைந்தூட்டும்தாயினும்சாலப்பரிந்து"

என்ற பாடலைப்பாடியவுடன்,

'புரம்புரம் திரிந்த, செல்வமே சிவபெருமானே' என்ற இடத்தில் 'புரம்புரம்' என்ற சொல்லுக்குரிய பொருளை ஆராய்ந்து அதில் ஒன்றிவிடுவார். எல்லா இலக்கியங்கள், புராணங்கள், பக்தி இலக்கியங்கள், இலக்கணக்கூறுகள் என எல்லா வகைகளிலும் ஆழ்ந்த ஈடுபாடும், விருப்பமும், நினைவாற்றலும் நிரம்பியவர். கம்பன் கழகக்கூட்டங்கட்குச்செல்லும்போது, ஒரு சில நூல்களைப் படித்துக் கொண்டேயிருப்பார். அயோத்தியாகாண்டத்தில் வரும் அவலச் சுவை பாட்டு ஒன்றில் ஒரு வரியைக்கூறச் சொல்வார். நினைவில்லை என்ற சொல்லே ஔவை அவர்களிடம் சொல்லக் கூடாது. எனக்குத் தெரிந்த ஒரு பாடலை, அதாவது இராமன் அயோத்தியினின்று வனத்திற்கு ஏகும்போது

"ஆவும்அழுத அதன் கன்றழுதஅன்றலர்ந்த
பூவும் அழுதபுனற்புள்அழுத"

என்று தொடங்கியவுடன், "போதும்மா! இந்த ஒரு வரியில் ஒரு மணிநேரம்பேசிவிடுவேன்" என்று சொல்லிப் புறப்படுவார். உடல் நலம் சரியில்லை என்றாலும், யாரையும் ஏமாற்றக் கூடாது என்ற நல்லெண்ணம் கொண்டவராய், கூட்டத்திற் கலந்து, அருவியாய்நல்லுரைபொழிவார்.

## பண்பு நலன்கள்

முனைவர் ஔவை அவர்கள் பண்பு நலன்களைஅடுக்கிக் கொண்டே போகலாம். மற்றவர்களைஉயர்நிலைக்குக் கொண்டு செல்லவும், அவர்கள் வளர்ச்சி குறித்தும் சிந்தித்துக்கொண்டிருப்பார். அடியேனை முனைவர் பட்டம் பெறவேண்டிபேரவாக் கொண்டு தமிழ்ப்பேராசிரியர்கள்இருவரிடம்ஆற்றுப்படுத்தினார். அவர்கள் ஓரிரு காரணங்களால்மறுத்துவிடவே, வருந்திய ஔவை அவர்கள், முனைவர் பட்டம் பெற்றவர்கள்தாம்முனைவரா? எக்காலும் பல பொருள்களை ஆய்ந்து முனைந்து எழுதிக்கொண்டிருக்கும்தங்களையும் முனைவர் என்றே அழைப்பேன் என்று கூறி, அவர் முனைவர் பட்டஆய்வேட்டுநூலான'சங்க காலப்புலமைச்செல்வியர்' என்ற நூலில் "முனைவர் தி.வே. விஜயலட்சுமிஅம்மையார்க்கு அவர்களின் புலமையைநயந்துவழங்கியது" என்று எழுதிக்கையொப்பமிட்டு அளித்தார். வாழ்வில் என் உயிர் உள்ளளவும் மறக்க முடியாத பெரும் பட்டம் இஃது என்று எண்ணி உவப்படைந்தேன். 'திருக்குறள் திலகம்' என்ற விருதையும் ஒரு விழாவில் அளித்துப்பெருமைப்படுத்தினார். அதேபோல், அவர் நினைத்தபடி என் கட்டுரை அமையவில்லைஎன்றாலோ, அணிந்துரையில்வடமொழிச் சொற்கள் கலந்து விட்டாலோ சினம் வரும். ஆனால் அந்த வெகுளி கணநேரந்தான்.

"குணமென்னும்குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது"

என்ற குறட்பா நினைவிற்கு வரும். பல புதிய தலைப்புகள், தலைவர்கள், பல இலக்கியச் சுவை மிகுந்த பாடல்கள் பற்றியெல்லாம் கலந்துரையாடிய பேறும் பெற்றுள்ளேன் என்பதை நான் உள்ளார்ந்த உவப்புடன் கூறிக்கொள்கிறேன். ***தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .***





# புகழ் வணக்கம்

அருளுள்ளம் வாய்ந்த அழகுதமிழ்ச் சொல்வேந்தர் . . .

## ஔவை அவர்கள் செயலர்கள்

ஔவை அவர்கள் செயலாளர்கள் இருவர்; இலட்சுமி அவர்கள், திரு பிரதாப் (பொன்னேரி) குறிப்பிடத்தகுந்தவர்கள். ஐயா அவர்கள் இட்ட பணியை நேரங் கடத்தாமல் செய்து, உறுதுணையாக இருந்ததை நான் தொடர்ந்து பார்த்திருக்கிறேன். எனவே அந்நிகழ்வைக்குறிப்பிட்டே ஆகவேண்டும். "யான் கண்டனையர் என் இளையர்" என்று பிசிராந்தையார்கூற்றிற்கேற்ப, அவர் செயலாளர்கள் ஔவை அவர்கள் குறிப்பறிந்துசெயலாற்றுவர். ஐயா அவர்கள் குடும்ப நலன்களைஉசாவி, அவர்கட்கு வேண்டிய உதவிகளைச் செய்து முடிப்பர்.

2017 ஆம் ஆண்டு முதல் அறிஞர் ஔவை அவர்கள் உடல்நலம் கொஞ்சம் குன்றியிருந்ததால், தி.நகர் திலக் தெருவிற்கு வருவதைக் குறைத்துக் கொண்டார். அண்ணா நகர் இல்லத்தில் இருந்து விட்டார். அதனால் அவருக்குப் பல நன்மைகள். தாரா அம்மா எந்நேரமும் அவர் அருகில் இருந்து கவனிக்கவும், மருத்துவம் செய்யவும் இயன்றது. நான் அண்ணா நகருக்கு ஆண்டு 4,5 முறை சென்று பார்த்து, இலக்கியம் தொடர்பாகக் கலந்து அளவளாவி, வாழ்த்துகள் பெற்று வருகிறேன்.

## எந்தையார் நூற்றாண்டு விழா

2019 நவம்பர் 28ஆம் நாள் எங்கள் தந்தையார் பேராசிரியர் எச். வேங்கடராமன் அவர்களின் நூற்றாண்டு விழாவைச் சென்னை உருசியன் அரங்கில் சிறப்பாக என் குடும்பத்தார்உறுதுணையுடன் நடத்தினோம். நம் ஔவை அவர்களை இதன் பொருட்டுக்கலந்தாய்ந்து, எங்கள் தந்தையார்மாணவர்கள்மூவருக்குவேங்கடஅறவாணர் என்ற விருது அளிக்கப்பட்டது. நூற்றாண்டு விழாவில் முனைவர் ஔவை நடராசன் அவர்கள் ஆற்றியசிறப்புரை தமிழக இலக்கியவரலாற்றில் இடம் பெற வேண்டியவொன்று. அரசர் கல்லூரியின்பெருமையையும், எம்தந்தையார்இலக்கிய இலக்கண ஆற்றலையும், என்னைப்பற்றிப்பெருமையாகவும் கூறி, தமிழுலகத்திற்குவேண்டுகோளையும்விடுத்துஅரியதொரு இன்னுரையைஇயம்பினார். விருதுக்குப் பெயர் வழங்கியவரும் ஔவை அவர்களே. விழா குறித்து தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், எங்கள் தந்தையார்மாணவருமாகிய முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுடன் கலந்துரையாடினேன். அவர் அளித்த அறிவுரை, பரிந்துரையின் பேரில் ஔவை அவர்கட்குதந்தையார் நினைவாக அவர் மிக விரும்பும்உலகின் மூத்த தமிழறிஞர் முன்னாள் துணை வேந்தர் ஔவை நடராசன் அவர்கட்கு "வாழ்நாள் சாதனையாளர்" விருதும்வழங்கப்பட்டதுஎன்பதைப்பேருவகையுடன்தெரிவிப் பதில் பெருமிதம் அடைகின்றேன். அஃது தமிழ் வரலாற்றில் என்றும் இடம் பெற்றிருக்கும்.

## நிறைவு

அறிவிலே தெளிவும், நெஞ்சிலே உறுதியும் அகத்திலே அன்பினோர் வெள்ளமும், பொழுதெல்லாம் பல்துறை நூல்களைப் படிக்கும் ஆர்வமும், நினைவெல்லாம்ச ிந்தனைப் புதுமையும், கேளாரும் வேட்ப மொழியும் சொல் வன்மையும் குறைவறப் பெற்ற அறிஞர் ஔவை நடராசன் அவர்கள் தமிழ் மொழிக்கு நிகரான ஆங்கில மொழிப் புலமையும் நிரம்பப் பெற்றவர். இவர் உரையில் அடுக்கு மொழிகள் மிடுக்காக வந்து விழும். நாநயம் மிக்க நாவேந்தராக மட்டும் மிளிராமல் மனிதநேயம் மிக்க மாமனிதர் என்ற எண்ணத்தையும் என்போன்றோர் உள்ளத்தில் உருவாக்கியவர் அவர் என்பது புலம்மிக்கவர் அறிந்த பேருணர்வு. அம்பெருமகனார் பாடகன்ற நல்லுடலுரம் பெற்று, எம்போன்றோர்க்கு உந்து சக்தியாய் ஊக்க மருந்தாய் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டுகள் பாரினில் வாழ வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைவேண்டுகிறேன்.

"நீலமணிமிடற்று ஒருவன் போல்
மன்னுகபெரும நீயே" என்று ஔவைப் பிராட்டியார் வேந்தன் அதியமான் நெடுமான் அஞ்சியை வாழ்த்தியதைப் போல நாவேந்தரை வாழ்த்தி வணங்குவோம்.